048

உ
கணபதி துணை

# திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்

தொல்காப்பியத்தேவர் இயற்றியது

THE REGISTRAR OF BOOKS MADRAS 13 FEB 1940

3366

இது
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையரால்
பரிசோதித்து
நூதனமாக எழுதிய
குறிப்புரை முதலியவற்றுடன்

9556

சென்னை
லிபர்ட்டி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

(மூன்றும் பதிப்பு)

பிரமாதி௵

Copyright Registered] 1940 [விலை அணா 5

10

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 FEB 1940
MADRAS

2618
894.8111

உ
கணபதி துணை

# முகவுரை

திருச்சிற்றம்பலம்

"ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே.

திருச்சிற்றம்பலம் (தேவாரம், திருநா.)

கலம்பகமென்பது தமிழ்ப்பிரபந்த வகைகளுள் ஒன்று. இதன் இலக்கணம் பன்னிருபாட்டியல் முதலிய பிரபந்த இலக்கண நூல்களிற் காணப்படும். கலம்பக மென்பதற்குப் பலவகையான பொருள்கள் கூறப்படினும் பலவகை மலர்களும் கலந்து அமைத்த கலம்பகமாலை யென்று பொருள்கொண்டு, பொருளாலும் யாப்பாலும் பலவகைப்பட்ட செய்யுட்களை யுடைமையின் இவ்வகை நூலுக்குப் பெயராயிற்றென்று கொள்வதே பொருத்தமாகத் தோற்றுகின்றது. "களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த, அலங்கலந் தொடையல்" (திவ். திருப்பள்ளி. 5), "பல பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலை" (பெரும்பாண். 174, ந.) என்பவற்றால் கலம்பகமென்பது ஒருவகை மாலையைக் குறித்தல் தெளிவாகும். இரட்டை மணிமாலை, மும்மணிமாலை, மாலை என்னும் பல்வகை மாலைகளின் பெயர்கள் பிரபந்தங்களுக்குரிய பெயர்களாகி வழங்குதல்போல இப்பெயரும் வழங்கலுற்றது போலும். கலம்பகத்துள் அகத்துறைச் செய்யுட்களும் புறத்துறைச் செய்யுட்களும், பாக்களும் பாவினங்களும் விரவி அந்தாதித் தொடையாக அமையும்; இறுதியும் முதலும் மண்டலித்து நிற்கும்; கொச்சக ஒரு போகு முதலில் வரும். சில வகை மகளிரைக் கண்டு காமுற்ற இளைஞர்கள் தம் காமக்குறிப்புத் தோன்ற அவர்களோடு பேசும் உலகியல்பைத் தழுவி மதங்கியார், பிச்சியார், கொற்றியார் முதலிய உறுப்புக்களும், இரசவாதம்

செய்வதாகவும் பலவகையான செயற்கரிய செயல்கள் செய்வதாகவும் கூறி ஏமாற்றுவோர் இயல்பை நினைந்து சித்து, சம்பிரதம் என்பனவும், கள்ளுண்போன் இயல்பை விளக்கும் களியும், தவஞ்செய்வதாற் பலனில்லையெனக் கூறும் தவமும், வேறு பிறவும் கலம்பகங்களில் உறுப்புக்களாக அமையும்.

திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகமென்பது திருப்பாதிரிப்புலியூரென்னுந் தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமான்மீது தொல்காப்பியத் தேவரென்னும் ஒரு பெரியாரால் இயற்றப்பெற்றது. இதிலுள்ள செய்யுட்டொகை 103 (பாயிரம்-3 ; நூல்-100.)

திருப்பாதிரிப்புலியூரென்னும் தலம் நடுநாட்டிலுள்ள தேவாரம்பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்று; இதற்குரிய பதிகம் 2 (திருஞா-1 ; திருநா-1.) வடமொழி தென்மொழி யிரண்டிலும் இதற்குப் புராணங்கள் உள்ளன.

பல வருஷங்களுக்கு முன் அச்சிடப்பெற்ற தமிழ்ப்புராணம் திருவாவடுதுறை யாதீன வித்துவானும், சற்றேறக்குறைய நூற்றிருபத்தைந்து வருஷங்களுக்கு முன் இருந்தவரும், திராவிட மாபாடியக் கர்த்தராகிய சிவஞானமுனிவரின் மாணுக்கருமாகிய இலக்கணம் ஸ்ரீ சிதம்பரநாத முனிவரென்பவரால் இயற்றப் பெற்றது.

இத்தலத்துத் திருக்கோயிற் கருப்பக் கிருகத்தின் மேல்புறச் சுவர்ச் சிலாசாஸனத்திலுள்ள "தழைத்த திருப்பாதிரிப்புலியூர்" என்பது முதலிய இரண்டு செய்யுட்களால், கன்னிவனப்புராணம், புலியூர் நாடகமென்னும் இரண்டு நூல்கள் ஒரே புலவரால் இயற்றப்பெற்று இத்தலத்திற்கு உரியனவாயிருந்தமை வெளியாகின்றதென்றும், சிலாசாஸனங்களில் ஸ்வாமி திருநாமம் கடைஞாழல் மகாதேவரென்றே வழங்கப்படுகின்றதென்றும் திருவனந்தபுரம் சம்ஸ்தானத்திற் சிலாசாஸன பரிசோதகராக இருந்த ஸ்ரீ து. அ. கோபிநாதராவ் அவர்கள் எம். ஏ. சொன்னர்கள். அந்நூல்கள் இப்போது கிடைக்கவில்லை.

சினலயமொன்றை இந்நூலாசிரியராகிய தொல்காப்பியத் தேவர் கட்டுதற்காக ஓரிடத்தில் செங்கல் அறுக்கச் சொன்ன பொழுது, திருப்பாதிரிப்புலியூர்க் கோயில் விசாரணைக்காரர்கள்

கோபங்கொண்டு இவரை நோக்கி, "எங்கள் தோன்றாத் துணைப் பெருமானுக்குரிய இந்த எல்லையில் நீர் இது செய்வது முறை யோ?'' என்று கேட்டனர். உடனே இவர்,

"வேத மொழிவிசும்பு மேனி சுடர்விழிமண்
பாதந் திருப்பா திரிப்புலியூர்—நாதர்
பரமாம் பரமாம் படுகடலெண் டிக்கும்
கரமா மவர்க்குயிர்ப்பாங் கால்"

என்னும் செய்யுளைக் கூறி "உலகமெல்லாம் சிவபெருமானுக் குரியதாக இருப்ப அவருக்குரியதெனச் சிறுபகுதியை எல்லை கோலுதல் முறையோ'' என்ற தமது கருத்தை வெளிப்படுத் தினர். அவர்கள் இவருடைய சமரச ஞானத்தையும் வாக்கு வன்மையையும் உணர்ந்து, "இந்த வெண்பா மிகவும் நன்றாக இருக்கின்றது. இத்தலத்துப் பெருமான்மீது ஒரு கலம்பகம் பாடித்தரவேண்டும்'' என்று வற்புறுத்தி வேண்டிக்கொள்ள இவர் இந்நூலைப் பாடி அரங்கேற்றினர். தாம் முன்னர்ப் பாடிய செய்யுளை இரண்டாம் பாடலாக அமைத்துக் கொண்டனர்.

இந்தக் கலம்பகம் தமிழ்நாட்டில் எங்கும் பரவிப் புலவர் களது உள்ளத்தைக் கவர்ந்தது. இரட்டையர்கள் இதில் மிக்க ஈடுபாடுடையவர்கள். அவர்கள் தில்லைத்தலத்திற்கு வந்து ஸ்ரீ நடராஜமூர்த்தியைத் தரிசித்து ஒரு கலம்பகம் பாடினர். பிறகு அதனை அரங்கேற்றியபோது ஏதோ ஒரு காரணத்தால் மனவருத்தம் உண்டாக, "நாம் இக்கலம்பகம் பாடியது எம்பெரு மான் திருவுள்ளத்துக்கு ஏற்புடையதன்றோ!'' என்ற ஐயம் எழுந்தது. உடனே தாம் மிக்க அன்போடு போற்றிப் படித்து வந்த திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகச் சுவடியிற் கயிறு சார்த் திப் பார்த்தனர். அப்போது,

"பாடுவார் பாடும் பரிசில் வரிசையெல்லாம்
ஆடுவா ரன்றி யயலா ரறிவாரோ
தோடுவார் காதன்றே தோன்றாத் துணையையர்
பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே,''

என்ற 16-ஆம் செய்யுள் கிடைத்தது. அச் செய்யுட் கருத்து அவர்களுடைய புண்பட்ட உள்ளத்துக்கு மருந்துபோல உதவி யது. "நம் பாடலை நன்கு உணர்ந்து இன்புறாமல் தடை செய் பவர்களும் உள்ளாரே'' என்ற வருத்தமும் அவர்களுக்கு முன்பு

இருந்தது. இச்செய்யுளில், "ஆடுவா ரன்றி யயலா ரறிவாரோ" என்றுள்ள அடி நடராஜப் பெருமானைச் சுட்டி நிற்றலால் அவர்களுடைய உள்ளம் ஆறுதலடைவதற்கு ஏதுவாயிற்று. அப்பால் கலம்பக அரங்கேற்றம் இனிது நிறைவேறியது.

பிறகு அவர்கள் திருவாமாத்தூருக்குச் சென்ற காலத்தில் அங்குள்ளாரிற் சில அன்பர்கள், "இத்தலத்துக்கு ஒரு கலம்பகம் பாடவேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். தில்லைக் கலம்பகம் பாடி அரங்கேற்றிய காலத்தில் உலகியலை நோக்கி வருந்தியவர்களாதலின், "தொல்காப்பியத் தேவரைப் போன்றவர்கள் பாடலாமே யன்றி நாம் பாடும் தகுதி யுடையவர்களல்லோம்" என்று கூறி,

"தொல்காப் பியத்தேவர் சொன்னதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைப்ப தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்திற் கண்பிசைந்து
பல்காற் பொருமினர்க்குப் பாற்கடலோன் றீந்தார்க்கே"

என்னும் பாடலையும் கூறினர்; அப்பால் அவ்வன்பர்கள் வற்புறுத்தவே திருவாமாத்தூர்க் கலம்பகத்தைப் பாடி முடித்தனர்.*

இவ்வரலாறுகள் இரட்டையருக்கு இந்நூலினும் இந்நூலாசிரியரிடத்தும் உள்ள பெருமதிப்பைப் புலப்படுத்தும்.

தொல்காப்பியத் தேவரென்னும் பெயரைக்கொண்டு இவர் சைனரென்றேனும் சைவரென்றேனும் துணியக்கூட வில்லை. தமிழ் நாவலர் சரிதையிலுள்ள குறிப்பு இவரைச் சைனரென்று கருத இடந்தருகின்றது. ஆயினும் இந்நூலிலுள்ள செய்திகள் இவரைப் பரம சைவரென்றே நினைக்கச் செய்கின்றன.

"எம்முடைய பவமுனியுங் கயமுனியும்" (1)

என்று விநாயகக்கடவுளையும்,

"என்னையா ளுடைய வீசன்" (காப்பு, 1), "எஞ்சிவன்" (55)
"பாதகத் தேனுக் கருளுமா ரமுதை" (94)

என்று சிவபெருமானையும் கூறும் பகுதிகளும்,

---

* தொல்காப்பியத் தேவரைப் பற்றியும், இரட்டையரைப் பற்றியும் இங்கேயுள்ள வரலாறுகள் தமிழ்நாவலர் சரிதையிற் கண்ட குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு ஊகித்தறிந்து எழுதப்பட்டன; முற்பதிப்புக்களில் ஒருவகையாக எழுதியிருந்த வரலாறு இப்போது மாற்றப்பட்டது.

"தன்னையா னினைப்பத் தந்து தலையளிப் பதற்கு நாயேன்
பின்னையான் செய்யுங் கைம்மா றறிகிலேன் பெருமை யாலே
முன்னையா ரணங்க ளோதும் பாதிரிப் புலியூர் மூர்த்திக்
கென்னையாட் கொடுப்ப தன்றி யேழையே னென்செய் கேனே" (35)

என்னும் செய்யுளும் இவர் முதலிற் சைனராக இருந்து பிறகு சைவராயினரென்று ஊகிக்கச் செய்கின்றன.

கிளியென்னும் உறுப்பில்,

"துள்ளித் துடித்துவரு கின்றவரு கந்தமுனி
கோசார நின்று கொளுவ" (22)

எனவும், 48-ஆம் செய்யுளில்,

"சொல்லொன்று கவிக்கரசைத் துகில்புனையா தவர்கடலிற் றொடுத்துவிட்ட
கல்லொன்று புணையாக்கி"

எனவும் வரும் பகுதிகள் சைனர்களிடத்தில் இவருக்கிருந்த பற்று நீங்கியதைக் காட்டுகின்றன.

தேவரென வழங்குதலின் இவர் முதலில் சைனத் துறவியாக இருந்தவரென்று கொள்ள இடமுண்டு; திருத்தக்க தேவர், தோலாமொழித் தேவரென்னும் பெயர் வழக்காறுகளைக்காண்க. இல்லறத்தை வெறுத்து இவர் துறவறத்திலே பற்றுடையவரென்பதை,

"பானலம் பொருந்துங் கண்ணார் பயிலினந் துறந்து விட்டு
.........எம்மானை யிறைஞ்சுவார் மே, லானவர்" (64)

என்னும் செய்யுள் புலப்படுத்துகின்றது.

இரட்டையர்களது காலத்திற்கு முற்பட்டவரென்று தெரிதலால், இந்நூலாசிரியர் அவர்களாற் பாடப்பெற்ற வரபதியாட் கொண்டானென்னும் பிரபுவுக்கும், அவன் விருப்பத்தின்படி பாரதம் பாடிய ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வாருக்கும், அவர்காலத்தவர்களாகிய ஸ்ரீ அருணகிரிநாதர் முதலிய பெரியோர்களுக்கும் முன்பு இருந்தவராக எண்ணப்படுகின்றார். திருவாமாத்தூர்க்கலம்பக முதலியவற்றில் இந்நூலின் கருத்துக்களைப்பரக்கக் காணலாம்.

இக்கலம்பகத்தில் உள்ள இத்தல சம்பந்தமான செய்திகள் வருமாறு:—

தல விநாயகர்கள் இருவர்: (1) சொன்னவாறறியும் விநாயகர் (பாயிரம், 1), (2) மேற்குமதில் விநாயகர் (பாயிரம், 2.)

சிவபெருமான் திருநாமங்கள் :—கரையேற்றும்பிரான், கன்னிவனநாதன், சிவக்கொழுந்து, தோன்றாத்துணை முதலியன. இவற்றுள் கரையேற்றும் பிரானென்பது கரையேற விட்டவ ரெனவும் வழங்கும். சமணர்களால் கடலுள் வீழ்த்தப்பட்ட திருநாவுக்கரசுநாயனர் கரையேறும்படி அருள்புரிந்தமையின் இத்திருநாமம் வந்தது. தோன்றாத்துணை யென்னும் திருநாமம் தேவாரத்துள்ளும் வருகின்றது. சிவக்கொழுந்தென்னும் திரு நாமம் இத்தலத்து மூர்த்திக்குரியதென்பது இக்கலம்பகத்தால் அறியப்படும் செய்தி ;

"திருக்கடை ஞாழலிற் சிவக்கொழுந்து" (56)

"சிவக்கொழுந்தை நினைந்துருகி" (57)

"கல்லாதார் மனத்தணுகாக் கடைஞாழற் சிவக்கொழுந்தை" (68)

என மூன்று இடங்களில் அத்திருநாமத்தை இந்நூலாசிரியர் அமைத்தனர். இவற்றுள்ளும் 57-ஆம் செய்யுளில் இத்தலத்திற் குரிய அடையாளமாக வேறொன்றையும் கூறாமல் இத்திரு நாமத்தை மட்டும் கூறியிருத்தல் இத்தல மூர்த்தியின் திருநாமம் இஃது என்பதைத் தெளிவுறுத்துகின்றது. இப்போது பாட லேசுவரர் என்னும் திருநாமம் ஒன்று வழங்கிவருகின்றது.

அம்பிகையின் திருநாமங்கள்:—பெரிய நாயகி, தோகை நாயகி யென்பன ; இவற்றுள், தோகைநாயகி யென்னும் திரு நாமம்

"தோற்றுவார் சுரிகுழற் றோகை பாகரே" (58)

என்பதிற் குறிப்பிக்கப்படுகின்றது. இங்கே உமாதேவியார் பாதிரிமரத்தின் கீழிருந்து தவம் புரிந்தனரென்பது புராணவர லாறு ; அருந்தவநாயகியெனத் தனியே ஓரம்பிகையின் திருக் கோயில் இங்கு உண்டு. இந்நூல் எட்டு இடங்களில் (பாயிரம், 2, 3; நூல், 56, 87, 97, 99, 100) அம்பிகை தவஞ்செய்த செய்தி யைக் கூறுகின்றது.

இத்தலத்தின் திருநாமங்கள் பல. அவற்றுள் இந்நூலிற் பயில்வன கடைஞாழல், கன்னிகாப்பு, கன்னிகாவனம், கன்னி வளம்பதி, கன்னிவனம், திருப்பாதிரிப்புலியூர், பாதிரிப்புலிசை யென்பனவாம்.

தலவிருட்சம்:—பாதிரி ; அது பல மலர்களை ஒரு காலத்திற் பூத்ததென்னும் செய்தி இதில் அங்கங்கே (பாயிரம், 3; நூல், 39, 41) காணப்படும்.

**தீர்த்தம்** :—இத்தலம் கடற்கரையிலுள்ளது. இதில் உள்ள நதி கெடிலமென்பது; அது கடிலமெனவும் வழங்கும் (45); இப்போது திருக்கோயிலுக்கு வடபால் ஓடும் அந்நதி இந்நூலாசிரியர் காலத்தே தென்பால் ஓடியதென்பது,

"..........................கடிலமா நதியதன் வடபால்
செய்த்தலைக் குவளை மகளிர்கண் காட்டுந்
திருக்கடை ஞாழல்" (45)

"மெத்திவரு கின்றகெடி லத்துவட் பாலே
மெல்லிய றவஞ்செய்கடை ஞாழல்". (100)

என்பவற்றால் உணரப்படும். பிற்காலத்தில் இயற்றப்பட்ட தலபுராணம் மாணிக்கவாசகர் பொருட்டு இந்நதி இவ்வாறு மாறியோடியதென்று கூறுகின்றது. மாணிக்கவாசகர் காலத்திற்குப் பிற்பட்ட இக்கலம்பக நூலாசிரியரது காலம் வரையில் இது மாறவில்லையென்று தெரிதலின் அப்புராணத்திற்கண்ட செய்தி பொருத்தமுடையதாகத் தோற்றவில்லை.

இத்தலத்து வரலாறுகள் பல இந்நூல் 56-ஆம் செய்யுளில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

பூசித்துப் பேறுபெற்றோர் :—கரத்திற்கண்ணுடையவர், காலிற் கண்ணுடையவர், வியாக்கிரபாதர், உபமன்னியுமுனிவர், பதஞ்சலிமுனிவர், மாதிராசன், முந்நூற்றறுபது அந்தணர் என்போர்; இவர்களுட் பலர் வரலாறுகள் புதிய புராணத்தினால் அறிய முடியவில்லை. ஆதலின் இந்நூலாசிரியருக்குத் துணையாக இருந்த நூல், சிலாசாஸனத்திற் குறிப்பிட்ட கன்னிவனப் புராணமென்றே தோற்றுகின்றது. மாதிராசனென்று இக்கலம்பகத்திற் கூறப்பெறும் சோழனை ஆதிராசனெனப் புதிய புராணம் கூறும்.

திருஞானசம்பந்த மூர்த்தியும் திருநாவுக்கரசரும் இங்கே எழுந்தருளித் தரிசித்துத் தேவாரப் பதிகம் பாடினர் (11, 55, 56); திருநாவுக்கரசர் கரையேறிய செய்தியையும் இந்நூலாசிரியர் குறிக்கின்றனர் (48.)

இத்தலத்தின் ஆலய முரசமும் (31), இத்தலத்து விழாவும் (69) இவ்வாசிரியராற் பாராட்டப் பெறுகின்றன.

இந்நூலாசிரியர் மெய்ஞ்ஞானச் செல்வரென்பதும் (1, 9), சிவபெருமானது விசுவரூபத்தைப் பாராட்டும் இயல்பினரென்பதும் (21, 40, 44, 75), திருநீறு (5, 11, 32, 40), ஸ்ரீ பஞ்சாட்

சரம் (5) என்பவற்றில் அன்புடையவரென்பதும், நாயன்மார்களிடத்தில் பக்தியுடையவரென்பதும் (1, 22) ஆங்காங்குள்ள செய்யுட்களிற் கண்ட செய்திகளால் அறியலாகும்.

சற்றேறக்குறைய 50 வருஷங்களுக்கு முன்பு தமிழ் நாவலர் சரிதையை ஆராய்ந்தபோது 'திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்' என்ற நூலொன்று தொல்காப்பியத் தேவரென்னும் பெரியாரால் இயற்றப்பெற்றுள்ளதென்னும் செய்தியை அறிந்தேன்; அதுமுதல் இந்நூலின் ஏட்டுப்பிரதிகளைப் பலவிடத்தும் தேடிக் கொண்டிருக்கையில் வளவனூர் ஸ்ரீ தேசிக சடகோப பிள்ளையவர்கள் இந்நூலின் ஏட்டுப்பிரதிகள் இரண்டை அனுப்பினார்கள். முன்னர்ப் பழக்கமில்லாமலிருந்தாலும் தாமாகவே பிரதிகளை அனுப்பியுதவிய அவர்களுடைய தமிழன்பை மிகவும் பாராட்டுகின்றேன்.

இதன் முதற்பதிப்பு 1908-ஆம் வருஷத்திலும் இரண்டாம் பதிப்பு 1919-ஆம் வருஷத்திலும் வெளியாயின. அப்பதிப்புக்களிற் காணப்படாத சில திருத்தங்கள் இப்பதிப்பில் ஊகித்தறிந்து அமைக்கப்பட்டன. படிப்பவர்களுக்கு உபயோகமாக இருக்கும்பொருட்டு இதில் குறிப்புரை விரிவாக எழுதப்பெற்றது. பொருள் தெளிவாக விளங்காத சில செய்யுட்களின் முதலில் உடுக்குறி யிடப்பெற்றுள்ளது.

இப்பதிப்புக்கு வழக்கம்போல் உதவிசெய்தவர்கள் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், கலைமகள் துணையாசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

(வெண்பா)

நாவுக் கரசு நரலையமுந் தாதெடுத்த
சேவுக் கரசு சிவக்கொழுந்து—பாவுக்கும்
சான்ருத் துலங்குமுதல் சம்புகடை ஞாழலில்வாழ்
தோன்ருத் துணையே துணை.

"தியாகராஜ விலாசம்"
திருவேட்டீசுவரன்பேட்டை
4—1—1940

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்

## பாயிரம்

### காப்பு

### சொன்னவாறறி விநாயகர்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

1. பொன்னினுன் மாட மோங்கும் பாதிரிப் புலியூ ரையன்
என்னையா ளுடைய வீசன் றன்னிடத் திருந்த வோங்கற்
கன்னிமா னீன்றெ டுத்த கடம்பொழி கவுட்டு நால்வாய்ச்
சொன்னவா றறியும் யானை துணையடி தொழுவோ மியாமே.

### மேற்குமதில் விநாயகர்

(நேரிசைவெண்பா)

2. தேனுர் திருப்பா திரிக்கீழ்த் தவம்புரியும்
கானுர் குழலாள் கருத்துறைசேய்—வானுர்

---

## குறிப்புரை

1. ஓங்கற்கன்னி - மலைமகளாகிய உமாதேவியார். கடம் - மதம். மான் ஈன்றெடுத்த யானை யென்றது ஒரு நயம். சொன்னவாறறிவிநாயக ரென்பது, இத்தலவிநாயகர் திருநாமம்; "முன்ன வாவிய பழம்பொருள் யாவையு முனிந்து, பின்ன வாவிய பெரும்பொருள் யாவையு நல்கும், பொன்ன வாஞ்சடைப் பாடலேச் சுரனருள் புதல்வன், சொன்ன வாறறி களிற்றெழிற் றுணைமலர்ச் சரணே" (திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம், காப்பு, 2.)

2. தவம்புரியும் கானுர் குழலாள் - அருந்தவநாயகியம்மையார்; சிவ பிரானது ஆணையால் உமாதேவியார் இத்தலத்தில் தவம் புரிந்தனரென்பது புராண வரலாறு. கருத்தில் உறைகின்ற. குடக மதில் - மேற்கு மதில்.

குடகமதில் வீற்றிருக்குங் குஞ்சரக்கன் றென்பாற்
கிடமுளரி மாத ரிருப்பு.

### தலவிருட்சம்

(கட்டளைக்கலித்துறை)

3. அன்னை யருந்தவஞ் செய்கின்ற காலத் தருநிழலாய்க்
கன்னி வனத்தி லொருபா திரிகைதை செங்கழுநீர் [மத்தம்
மன்னு மலர்க்கொன்றை செண்பகங் கோங்குடன் ஞாழன்
புன்னை நலும்பிச்சி வெள்ளெருக் கம்புயம் பூத்ததுவே.

### நூல்

(ஒருபோகு மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா)

— தரவு —

1. பூமாலை புனைந்தேத்திப் பொன்மாலை முடிதாழ்த்துப்
பாமாலை நவின்றேத்திப் பலவமர ரடிவணங்க
வாழிமறை யொருநான்கு மண்முதலா கியவைந்தும்
ஊழிகளும் படைத்துடைய வொருமுதல்வி யுடனிருப்ப
எம்முடைய பவமுனியுங் கயமுனியு மிகலிமையோர்
தம்முடைய தவமுனியுந் தாரகனுந் தனிநிற்ப
ஞானத்தின் வடிவாய நந்தீசர் பணிகேட்பக்
கானத்தின் முதலாய கன்னிவனத் தினிதுறைவோய்!

---

முளரி மாதர் - அட்டலட்சுமிகள். விநாயகரது திருநாமத்தைக் கூறுவாருக் குரிய இடம் அட்டலட்சுமிகளும் வாழும் இடமாகும்; குஞ்சரக்கன்று - விநாயகர்.

3. கன்னி வனம்: இத்தலத்தின் திருநாமம்; அம்பிகை கன்னிகையாக இருந்து தவம் புரிந்தருளியமையின் இப்பெயர் வந்தது. கைதை - தாழம்பூ. ஞாழல் - புலிநகக் கொன்றைப்பூ. மத்தம் - ஊமத்தம்பூ. ஒரு பாதிரி பூத்ததென்க. பாதிரி, தாழம்பூ முதலியவற்றையும் பூத்ததென்பதை இந் நூல் 39, 41 - ஆம் செய்யுட்களாலும், "பன்னிரு பூமலர் பாதி ரிக் கணே" (திருநகர. 73), "புன்னை புண் டரிகம் பூக்கும் பாதிரிப் புலியூர்" (பிரமசில. 2), "கோங்கு சண்பகம் பிச்சிவெள் ளெருக்குச்செங் குவளைதா மரைபுன்னை, தேங்க மழ்கொன்றை ஞாழலுன் மத்தங்கான் செழித்தலர் தாழம்போ, தோங்கு பாதிரி காலையு மாலையு முகைத்தவிழ்ந் துமைபூசைக், காங்கு வேண்டிய தருணத்தி லுதவிடு மற்புதஞ் சொலற்பாற்றே" (பாடல மூல. 12) என வரும் இத்தல புராணச் செய்யுட்களாலும் உணர்க.

1. (தரவு) மண் முதலாகிய ஐந்து - பஞ்ச பூதங்கள். முதல்வி - உமா தேவியார். பவம் முனியும் - பிறப்பைக் கோபித்து நீக்குகின்ற. கய முனி -

— தாழிசை —

(க) வேதமுதற் றனிவிளக்கின் மெய்ஞ்ஞானச் சுடர்ச்சிகைமேல்
நாதமதற் கப்புறமாய் நணுகரிய வொருபொருணீ
படைத்தருள வயனாகிப் பாலித்தற் கரியாகித்
துடைத்தருள நீயாகித் தோன்றுவதுன் றொழிலாமே!

(உ) வானவரும் பூசுரரு மறைநெறியால் வகுத்தமைத்த
போனகங்க ளனைப்பலவும் புனிதமெனக் கொள்ளாது
கண்ணப்பன் மணிவாய்ப்பொற் கலசவிரைப் புனலாட்டி
உண்ணப்ப வெனவளித்த வூனமுத முகந்தனையே!

(௩) வானவராய் நரகராய் மானிடராய் விலங்காகித்
தானவராய்ப் பிறவுமாய்த் தம்முள்ளே தடுமாறி
எண்ணரிய பல்லுயிரு மிறந்துபிறந் துழலுமது
விண்ணவனே நீவகுத்த விளையாட்டின் கூத்தன்றே!

— அராகம் —

(க) அடையலர் திரிபுர மழலெழ வொருமுறை
வடவரை கொடுசிலை வளைவுசெய் தருளினை;

(உ) தடவரை தொடவரு தசமுக னொருவனை
உடலொடு முடியற வொருவிர னிறுவினை;

— தாழிசை —

(க) அரவநெடுந் திரைக்கடல்வா யாலால மெழநடுங்கிச்
சுரர்பரவச் சிறிதிருண்ட சுந்தரகந் தரத்தினையே!

---

யானைக் கன்றாகிய விநாயகர். தவமுனி - நாரதர். தாரகன் - பிள்ளை; இங்கே முருகக்கடவுள். கானம் - காடு.

(தாழிசை) க. சிகை - உபநிடதம். பாலித்தற்கு - காப்பதற்கு. துடைத்தருள - சங்காரஞ்செய்வதற்கு. உ. போனகம் - உணவு. வாயாகிய கலசம். விரை - நறு மணம். ௩. தானவர் - அசுரர்.

(அராகம்) க. அடையலர் - பகைவர். வடவரை கொடு - மேரு மலையைக் கைக்கொண்டு. உ. தடவரை - கயிலையங்கிரி. தொட - பெயர்க்க. தசமுகன் - இராவணன்.

(தாழிசை) க. அரவம் - ஒலி. கந்தரம் - திருக்கழுத்து. உ. முனிவன் - மார்க்கண்டேயர். மறலி - யமன். ௩. நினைப்பவன் முதலிய

(உ) அருமுனிவ னடியிணையி லபயமென வீழ்பவன்மேல்
வருமறலி யுயிர்வீழ மறிந்துருள வுதைத்தனையே!

(ங) அனைத்துலகிற் பல்லுயிர்க்கு மாருயிரா யமர்ந்தனையே!
நினைப்பவனுய் நினைப்புமாய் நினைப்பதுமாய் நின்றனையே!

(ச) வேடுருவந் தரித்தருளி விசயனுடன் பொருதனையே!
நாடறியத் திருத்தூது நம்பிவிட நடந்தனையே!

(ரு) விண்ணவர்நின் றபயமிட மேல்வருவ தோராது
கண்ணருளென் றிருந்தபடி கடுவிடமுண் டருளினையே!

— அம்போதரங்கம் —

(க) சொரிமத கரியை யுரித்தனை
(உ) சுரநதி சடையி லடக்கினை
(ங) பொருபுலி யதளை யுடுத்தனை
(ச) பொறியர வரையி லசைத்தனை ;

(க) மறைவிரித்தனை
(உ) பொருடொகுத்தனை
(ங) மழுவலத்தினை
(ச) மானிடத்தினை
(ரு) பிறைமுடித்தனை
(சு) பவமடித்தனை
(எ) பெண்ணுமாயினை
(அ) ஆணுமாயினை ;

எனவாங்கு

---

மூன்றும் ஞாதுரு ஞானஞேயமென்று வழங்கப்பெறும். ச. வேடு உருவம் - வேடவடிவம்; வேடு - வேட்டுவச் சாதி. விசயன் - அருச்சுனன். நம்பி - சுந்தரமூர்த்தி நாயனுர். ரு. மேல்வருவது ஓராது விண்ணவர் நின்று அபயமிட என மாற்றிப் பொருள் கொள்க. இத்தாழிசை மிகை யென்று தோற்றுகின்றது.

(அம்போதரங்கம்) முன்புள்ள நான்கும் முச்சீரோரடி அம்போதரங்கங்கள்; பின்புள்ள எட்டும் இரு சீரோரடி அம்போதரங்கங்கள். உ. சுரநதி - கங்கை. ங. அதளை - தோலை. ச. அசைத்தனை - கட்டியருளினை.

உ பொருள் - இறையனுரகப் பொருள். ச மான் இடத்தினை - இடத் திருக்கரத்தில் மானை உடையாய்; இடப்பாகத்தில் மான்போன்ற உமாதேவியாரை உடையை யெனலுமாம்.

எனவாங்கு: இது தனிச்சொல்; என - என்று; ஆங்கு: அசை.

— சுரிதகம் —

மெய்ம்மொழி வேதியர் நெய்ம்மலி வேள்வியிற்
பண்ணுறு நறும்புகை விண்முகில் காட்டும்
சீத வார்பொழிற் பாதிரிப் புலியூர்
அருமறை முதல்வநின் றிருவடி பரவுதும்
தீநெறிப் படரார் செம்மைநீ பணித்த
தூநெறிச் சென்ற தொண்டரிற் கூட்டா
தொழியாப் பிறவியுட் கூட்டினும்
அழியா வன்புதந் தருளுக வெனவே.

(நேரிசைவெண்பா)

2. வேத மொழிவிசும்பு மேனி சுடர்விழிமண்
பாதந் திருப்பா திரிப்புலியூர் - நாதர்
பரமாம் பரமாம் படுகடலெண் டிக்கும்
கரமா மவர்க்குயிர்ப்பாங் கால்.

(கட்டளைக்கலித்துறை)

3. கால்கொண்டு கண்ணழல் கொண்டுகை யிற்றிரி சூலமென்னும்
வேல்கொண்டு காலனை வேளினை வென்திற லந்தகனைச்
சேல்கொண்ட வாவித் திருப்பா திரிப்புலி யூரிற்செல்வர்
பால்கொண்ட நீற்ற ருதைத்ததுஞ் சுட்டதும் பாய்ந்ததுமே.

---

(சுரிதகம்) புகைக்கு மேகம் உவமை. படரார் - செல்லாதாராகி. செம்மை - செம்மையாக. என, அன்பு தந்தருளுகவெனப் பரவுதும்.

2. சுடர் - சோமசூரியாக்கினி, படுகடல் பரம அம்பரமாம் - ஒலிக்கின்ற கடல் மேலான ஆடையாகும்; ஆம் என்பதை, வேதம் மொழியாம் எனப் பிறவற்றோடும் கூட்டுக. உயிர்ப்பு - மூச்சு. கால் - காற்று. "மாநிலஞ் சேவடி யாகத் தூநீர், வளைநரல் பௌவ முடுக்கை யாக, விசும்பு மெய் யாகத் திசைகை யாகப், பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக, இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய, வேத முதல்வ னென்ப, தீதற விளங்கிய திகிரி யோனே" (நற், கடவுள்.) என்பதை அடியொற்றி வந்தது இச்செய்யுள்.

இச்செய்யுளும், "பாடுவார் பாடும்" என்னும் 16-ஆம் செய்யுளும் தமிழ்நாவலர் சரிதையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

3. கண் அழல் கொண்டென்பதை அழற்கண்கொண்டென மாற்றிப் பொருள் கொள்க. வேலென்பது ஆயுதப் பொதுப்பெயர். வேளினை -

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

4. பாய்ந்தநீர் பரந்த வேணிப் பாதிரிப் புலியூ ரையர்
ஆய்ந்தநூல் வரைந்த வேட்டுக் கஞ்சனக் காப்புச் சாத்த
வாய்ந்தநீர்க் கடல்க ளாற்று மற்றவர் பெருமை மண்மேற்
றேய்ந்தநூற் சிறிது வாணுண் மனிதரோ செப்பு வாரே.

## தவம்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

5. சென்று பூதலத் தெல்லை காணிலென்
தெய்வ மாநதித் துறைக ளாடிலென்
நின்று தீயிடைத் தவ்மி யற்றிலென்
நீறி டார்களே நிரய வாணரே
கொன்று தீவினைக் கொடுமை யாளரும்
கோதி லஞ்செழுத் தோதி நீறணிந்
தின்று பாதிரிப் புலிசை சேர்வரேல்
யாவ ராயினுந் தேவ ராவரே.

---

மன்மதனை. அந்தகனை - அந்தகாசுரனை. பால் கொண்ட நீற்றர்: "பவளம் போன் மேனியிற் பால்வெண்ணீறும்" (தே. திருநா.) இச்செய்யுள் நிரனிறை.

4. ஐயர் ஆய்ந்த நூல் - ஐயரது பெருமையை ஆராய்ந்து இயற்றிய நூல்கள்; ஐயர்: ஆகுபெயர். அஞ்சனக் காப்பு - புதிய ஏடுகளின்மேல் தடவப்படும் மை; பழைய காலத்தில் பனையேடுகளின்மேல் மைக்காப்புச் சாத்தும் வழக்கத்தைத் தெரிவிக்கின்றது; "மஞ்சட் குளிப்பாட்டி மை யிட்டு" (தமிழ்விடுதூது.) ஆற்று - போதா. தேய்ந்த நூல் சிறிது வாணுள்- சிற்றறிவையும் சில்வாழ்நாளையுமுடைய; நூல் - நூலறிவு; ஆகுபெயர்.

5. தவமென்னும் உறுப்பில், தவஞ்செய்வாரது முயற்சி பயனற்ற தென்று இகழ்ந்து கூறப்படும்.

பூதலத்து எல்லை காணல் - பூமியை வலம் வருதல். தீயிடை - பஞ்சாக்கினி மத்தியில். பாதிரிப் புலிசை: பாதிரிப்புலியூரென்பதன் மரூஉ. இச்செய்யுளோடு, "பரவை யாடினு நதிக ளாடினு படியெ லாநடந் தடிக டேயினும், குரவ ராயினுங் கனலி னின்றதன் கொதிபொ றுக்கினுங் கதிகி டைக்குமோ, அரவ மாடுசெஞ் சடில ரங்கண ரமுதர் தாணினைந் தடியர் தம்மொடு, விரவி நீறணிந் தருணை சேர்வரேல் வெத்த ராயினு முத்த ராவரே" (அருணைக் கலம்பகம், 7) என்பது ஒப்புநோக்கற்குரியது.

## தலைவியிரங்கல்

(எழுசீராசிரியச் சந்தவிருத்தம்)

6. தேவா சுரர்பிற ருரகா திபர்செய
லறியா தயர்வுறு சிறியோமைக்
காவா யெனவெறி கடல்வாய் விடநுகர்
கருணை லயர்பயில் கடைஞாழற்
பூவா தொழிகில குரவா திகண்மயில்
செயலோ வினகுயில் பொழிறோறும்
கூவா வதிவன வவரோ வருகிலர்
கொடியே னெதுசெய்து முடிவேனே.

(சந்தக்கலிநிலைத்துறை)

7. முடியுடை யமரரு முனிவரு முறைமுறை தொழுதோதிக்
கடியுடை விரைமலர் பலகொடு வழிபடு கடைஞாழற்
கொடியுடை விடையினர் குலமறை முடிமிசை வருகோலத்
தடியுடை யவரடி பணிபவ ரெமபுர மடையாரே.

## தலைவன் தலைவியை இரந்துபின் நிற்றல்

(சந்தவிருத்தம்)

8. அடல்விடை தன்னை யுகைத்தார்
அதளுரி தன்னை யுடுத்தார்
அரவுகள் பின்னி முடித்தார்
அழகிய ரென்ன விருப்பார்

MADRAS
13 FEB 1940

---

6. தலைவர் மீண்டு வருவதாகக் கூறிச் சென்ற வேனிற்பருவங் கண்டு தலைவி புலம்பல்.

உரகாதிபர் :எழுவாய். என - என்று முறையிட. எறி - அலை வீசு கின்ற. கடைஞாழல்: இத்தலத்தின் திருநாமம். குரவு முதலிய மரங்கள் பூத்தன. செயல்: ஆடுதல். கூவா - கூவி. அவர் - தலைவர். முடிவேன் - இறந்துபடுவேன்.

7. கடி - விளக்கம். கொடியுடை விடையின ரென்பதை விடையுடைக் கொடியினரென்று மாற்றிப் பொருள் கொள்க. மறைமுடி - உபநிடதம்,

8. உகைத்தார் - செலுத்தியவர். அதளுரி - உரிக்கப்பட்ட தோல். அழுகற்றனவாகிய அதனை யுடுத்தும் அரவுகளைப் பின்னி முடித்தும் அதற்கு

மடவரன் மன்னு மிடத்தார்
மறலியை முன்ன முதைத்தார்
மருவிய கன்னி வனத்தார்
மலர்மிடை புன்னை நிழற்கீழ்
உடலிடை யென்னு யிரொப்பீர்
உருவுடை யன்ன நிகர்ப்பீர்
ஒளிமதி யன்ன முகத்தீர்
ஒருமயில் வன்ன நிகர்ப்பீர்
தடமுலை துன்ன நினைத்தே
தளர்வுறு மென்னு யிருக்கோர்
சரணுள தென்ன வுரைப்பீர்
தனிபடு மின்ன றவிர்த்தே.

## அம்மானை

(கலித்தாழிசை)

9. இன்ன திதுவென் றிறைவன் றிறமதனைச்
சொன்ன மறையுந் துணிந்திலகா ணம்மானை
சொன்னமறை யுந்துணியாத் தோன்றாத் துணையினைநம்
கன்னி வனத்திடையே காணலா மம்மானை
கண்டார் பிறிதொன்றுங் காணார்கா ணம்மானை.

## பொருள்வயிற் பிரியுந் தலைவன் அழுங்கல்

(கட்டளைக்கலித்துறை)

10. மானுள பேதை மயிலுள சாயன் மறக்கவொட்டாத்
தேனுள வல்லி பலவுள கிள்ளை சிலமிழற்றும்
கானுள கண்ணுதல் கன்னி வனங்கரு தாரினையும்
யானுள னெஞ்சம் பிரிவதெவ் வாறிவ் விரும்பொருட்கே.

---

முரணுக அழகியரென்ன இருப்பார். புன்னை நெய்தனிலத்துக் குரியது. உரு - அழகு. வன்னம் - இங்கே, சாயல், சரண் - புகலிடம். தனிபடும் இன்னல் - தனிமைத் துன்பம். தவிர்த்து உரைப்பீரென இயைக்க.

9. தோன்றாத் துணை : இத்தலத்துச் சிவபெருமான் திருநாமம்; "தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே" (தே. திருநா.)

10. தான் செல்லும் வழியில் தலைவியை நினைப்பிக்கும் பொருள்கள் பலவுள்ளன. பேதை மான் உள-தலைவியின் பேதைமைச்செயல்கள் மான் களிடத்தே உள்ளன; இப்பாட்டிற் பின்வருவனவற்றிற்கும் இங்ஙனமே

## புயவகுப்பு

(ஆசிரியவண்ணவிருத்தம்)

11. பொருள்புரி மறைநாலு முறைநின் றியம்பின
புகலியர் பெருமானு மரசும் புகழ்ந்தன
புலநெறி தொடராத விதயம் புரிந்தன
புகர்முக மதவேழ வதனம் பிளந்தன
அருளுடை மலைமாதி னகலம் புணர்ந்தன
அவமதி விதிபேணு மகமன் றுசிந்தின
அழல்வழி திரிசூல வயில்வென் றிகொண்டன
அரிமுத லிமையோர்க ளபயம் புகுந்தன
மருள்புரி முனிவீணை யிசைகொண் டளைந்தன
மதுகர நிரைசூழ மலர்கொன் றைதுன்றின
வரமிகு திருநீறு முழுதுந் துதைந்தன
வடிவுடை வடிகாதின் மகரங் கிடந்தன
இருள்கெட மணிநாக வலயஞ் செறிந்தன
இடம்வல மடமானு மழுவும் பொருந்தின
இகலினர் புரமாள வெரியம் புகொண்டன
இயல்பயில் கடைஞாழ லிறைவன் புயங்களே.

## பாங்கி கூற்று

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

12. புயங்களி லகன்ற மார்பிற் புரிசடைப் பரப்பிற் காதில்
வயங்கொளி நுதலிற் கையின் மருங்கினி லரையிற் றாளிற்

---

கொள்க. வல்லி - பூங்கொடிகள். மறக்கவொட்டா வல்லியென இயைக்க. தேன், வல்லிக்கு அடை. கருதாரின் நையும். நெஞ்சம் : விளி.

11. புகலியர் பெருமான் - திருஞான சம்பந்தர். அரசு - திருநாவுக்கரசு நாயனர். இவ்விருவரும் இத்தலத்தைப் பாடியவர்கள்; 55-6-ஆம் பாடல்களைப் பார்க்க. புலநெறி - ஐம்புலவழி. புரிந்தன - விரும்பின. வேழம் - கயாசுரன். அகலம் - திருமார்பு. விதி - தக்கன். மகம் - யாகத்தை. தோளளவும் நீண்ட காதுடையராதலின் அத்தோளைக் கம்பளாசுவதரருடைய வீணையிசையை அளைந்தன வென்றார். மதுகர நிரை - வண்டுகளின் வரிசை. மகரம் - மகரகுண்டலம். வலயம் - இங்கே தோள்வளை.

12. பாம்பைச் சிவபெருமான் தோளில் வாகுவலயமாகவும், மார்பில் ஆரமாகவும், சடைப்பரப்பிற் கண்ணியாகவும், காதிற் குண்டலமாகவும்,

பயங்கொள வரவ மார்த்த பாதிரிப் புலியூ ரையர்
தயங்குநற் கொன்றைக் கின்றென் றையலாண் மைய லாமே.

பாங்கி கூற்று

(கொச்சகக்கலிப்பா)

13. மையன் மடவீர் வயற்பா திரிப்புலியூர்
ஐயர் திருக்கெடில மாட்டி யவர்சாந்தம்
தையன் முலைமேற் றடவாதே புன்மருந்து
செய்ய விவள்பசலை தீருமோ தீராதே.

தலைவி கூற்று

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

14. தீராத விருவினையுந் தீர்த்து மேன்மை
தெளியாத மனந்தெளிவித் தன்பர் பின்னை
வாராத வகைசெய்யு மன்னன் கன்னி
வனநாதன் கடைஞாழன் மருங்கு வாய்விட்
டாராத கருங்கடலு முன்றில் வாய்கின்
றரற்றுத வன்றிலுநின் றழலே சிந்தி
ஈராத வாடையுந்தந் தகன்று ரல்லர்
என்கொலோ தலைவர்பிரிந் திருந்த வாறே.

---

நுதலிற் பட்டமாகவும், கையிற் காப்பாகவும், மருங்கினில் அரைஞாணாகவும் அரையிற் கச்சையாகவும், தாளிற் கழலாகவும் ஆர்த்தனர்; "கரமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம், பொருவில் புயவலய மாகும் - அரவரை மேல், நாணு மரற்கு நகைமணிசேர் தாழ்குழையாம், பூணும் புனைமாலை யாம்" (தண்டி. மேற்); "திருமுடியிற் கண்ணியு மாலையும் பாம்பு, திரு மார்பி லாரமும் பாம்பு - பெருமான், திருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு, பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு" (குமர. 485.) மருங்கு - இடை. கொன்றைக்கு - கொன்றை மாலையின்பொருட்டு.

13. திருக்கெடிலம் - இத்தலத்தினருகே ஓடும் நதி. சாந்தம் - சந்தனக் குழம்பை.

14. பின்னை வாராத வகை செய்யும் மன்னன் - மீட்டும் பிறவாதபடி அருள்புரியும் இறைவன்; "மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே, கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே" (திருவா. சிவபுராணம்.) ஆராத - முழங்காத. ஈராத - அறுக்காத. தலைவர் பிரிந்தமையால் கடல், அன்றில், வாடையென்னும் மூன்றும் துன்புறுத்துகின்றனவென்பது கருத்து.

## தலைவி இரங்கல்

(கலிநிலைத்துறை)

15. இரைதேர் குருகே யெறிவார் திரையே திரைமோதும்
கரைசேர் பொழிலே பொழில்சூழ் கழியே கண்டீரே
நரைசேர் விடையார் கடைஞா ழலினுண் மலருதும்
விரைதே ரளிபோல் வினவா தகல்வார் மெய்ப்பாடே.

(கொச்சகக் கலிப்பா)

16. பாடுவார் பாடும் பரிசில் வரிசையெல்லாம்
ஆடுவா ரன்றி யயலா ரறிவாரோ
தோடுவார் காதன்றே தோன்றுத் துணையையர்
பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே.

## சுனைவியந்துரைத்தல்

(எழுசீர்ச்சந்த விருத்தம்)

17. படைவாண் முறிந்து விழவா லறைந்து படுவாளை
யுந்தி வெருவா
மடைவாய் விழுந்து முழவோர் மலங்கி னுடனே
பிணங்கு வயல்சூழ்
கடைஞாழ லெந்தை மலைவாணர் தந்த கனிவாய்
மடந்தை தனிநீர்
குடைவா னடைந்த சுனையே தருங்கொல் குறுவேர்
வரும்பு குறியே.

---

15. இது காமமிக்க கழிபடர் கிளவி. எறிவார் திரையே - குருகை எறிகின்ற நீண்ட அலைகளே. விரை தேர் அளி: "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி" (குறுந். 2); அளி - வண்டு. வண்டு தலைவனுக்கு உவமை; "பெண்டிர் நலம்வௌவித் தண்சாரற் றுதுண்ணும், வண்டிற் றுறப்பான்" (கலி. 40 : 24-5.) மெய்ப்பாடு - உண்மைத்தன்மை; மன நிலையுமாம். மெய்ப்பாட்டைக் கண்டீரே என்க.

16. இரட்டையர் தில்லைக் கலம்பகம் இயற்றுதற்குமுன் இக்கலம் பகத்திற் கயிறு சார்த்திப் பார்க்க அகப்பட்ட செய்யுள் இது.

ஆடுவார் - நடனம் புரிவார். பாடுவார் ஓர் இருவர் - கம்பளர் அசுவ தரர். படைவீடு - இங்கே இருப்பிடமென்னும் பொருளில் வந்தது. "காதி விரண்டுபேர்" (தில்லைக்கலம்பகம், 8.)

17. படைவாள் - கலப்பை. வாலால் அறைந்து. படுவாளை - கையில் அகப்பட்ட வாளைமீன்; எழுவாய். உந்தி - தாவி. உழவோருடனும் மலங்கி

### தலைவன் கூற்று

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

18. குறியா வின்ப மன்பருக்கே கொடுப்பார் திருப்பா திரிப்புலியூர்
மறியார் கையர் மலைவாழு மயிலே யனையீர் மான்கெடுத்திங்
கறியா துங்கண் மருங்கணைந்தே னழியா மயங்க விழிவேல்கொண்
டெறியா வவ்வேல் பறியாதேயேகா நிற்ற லாகாதே.

### காலம்

### மடக்கு

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

19. காதலா ரங்கிருந்து பொன்படைக்குங் காலம்
கதிர்முலையு மிங்கிருந்து பொன்படைக்குங் காலம்
ஏதிலார் கொடியவா யலர்தூற்றுங் காலம்
இளந்தென்றல் கொடியவா யலர்தூற்றுங் காலம்
தாதுலா மலர்க்கொன்றைச் சடையர்கடை ஞாழற்
சங்கரர்பொங் கரவரையார் தமதருள்போற் குளிர்ந்து
மீதுலா மதிக்கதிரு மெனக்கழலுங் காலம்
மெய்ந்நிறையுங் கைவளையா மெனக்கழலுங் காலம்.

---

னுடனும் பிணங்கும். எந்தைக்குரிய மலை. மடந்தை : விளி. குறி - அடையாளம்.

18. தலைவன் மான் வினுதல். குறியா இன்பம் - முயற்சியும் நினைப்பும் இல்லாமல் வந்த இன்பம் (அகநா. 2 : 8, உரை.) குறியா இன்பத்தைக் கொடுப்பார் மலையில் இருந்தும் தான் குறித்த இன்பத்தையும் தாராது நின்றுளென்று தலைவன் குறிப்பித்தான். கெடுத்து - போக்கிவிட்டு. அழியா மயங்க - மனமழிந்து மயங்கும்படி.

19. பொருள்வயிற் சென்ற தலைமகன் கூறிய பருவங் கண்டு தலைவி அழுங்கல்.

அங்கு : நெஞ்சறிசுட்டு. பொன்படைக்கும் - பொருளை ஈட்டும், பசலையைப் பெறும். ஏதிலார் - அயலாராகிய மகளிர். கொடியவாய் அலர் தூற்றும் - கொடுமையையுடைய வாய்கள் பழிமொழிகளைக் கூறும், கொடிகளை விரும்பி அவற்றின் கண்ணுள்ள மலர்களைப் பரப்பும். பொங்கு-கோபிக்கின்ற. குளிர்ந்து மீது உலாம் - பிறருக்கெல்லாம் குளிர்ச்சியுடையதாகி வானத்தின்மீது இயங்கும். மதிக்கதிரும் எனக்கு. அழலும் - சுடும். நிறை - மனத்தை ஒருவழி நிறுத்துந் தன்மை. நிறை கைவளையைப்போலக் கழன்றுவிடும் காலம்; "நிறைபோ லெல்வளை நெகிழ்போ டும்மே" (ஐங். 20 : 5, பி - ம்.)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

20. காலமுங் கழிந்து மற்றைக் கடவுள ரிறந்து விண்ணும்
ஞாலமுங் குலையும் போது பாதிரிப் புலியூர் நாதர்
கோலமுங் கூத்துக் கேற்பக் கொண்டுதிண் டோள்கள் வீசிச்
சூலமுந் திரிவித் தாடல் புரிவரச் சுடலை மீதே.

பாங்கி இரங்கல்

(வேறு)

21. மீது படும்புர மும்புர வாணரு மென்னகை வெங்கனலில்
தீது படும்படி வென்றவர் நின்ற திருக்கடை ஞாழலின்வாய்
யாது படுங்கொல் பிரிந்தவர் நெஞ்ச மிருந்தவர் நெஞ்சுருகிக்
கோது படும்படி வந்தெரி சிந்தின கொண்டலி னுண்டுளியே.

களி

(பதினான்குசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

22. * துள்ளித் துடித்துவரு கின்றவரு கந்தமுனி
கோசார நின்று கொளுவத்
தோண்டிக் குடத்தைவர வைபூச னைக்குரிய
சோமாசி யார வர்பனங்

---

20. காலமும் கழிந்து - தமக்குரிய வாழ்நாட்களும் சென்று. திரிவித்து - சுழற்றி. தோள்கள்வீசி ஆடல் புரிதல்: "எண்டோள் வீசிநின் றாடும்பிரான்" (தே. திருநா.) அச்சுடலை யென்றது ஏனைத்தேவர் பட நின்ற இடத்தை. இச்செய்யுளோடு, "நீடாழி ஞாலம் வானெடு தீகா லுலாவும் யாவையு நீறுய கால மாய்விடுநாள், கோடாழி மால்பி தாமக னூறுன கோடி வீழ்தலை கோடீர பார மீதுறவே, சூடாத மாலை சூடுவர் தோளோடு தோளை வீசுவர் சோணசை லேசர் சோபனமா, ஆடாத வாட லாடுவர் பாடாத பாடல் பாடுவ ராராத வோகை கூருவரே" (அருணைக் கலம். 24) என்பது ஒப்புநோக்கற்குரியது. (பி-ம்.) 'குலையும் போதும்.'

21. மீதுபடும் - வானத்தின்மீது அமைந்த. தீதுபடும்படி - அழிய. இருந்தவர் - தலைவரைப் பிரிந்து தனித்திருந்த மகளிர். கொண்டல் - மேகம்.

பாங்கி கார்ப்பருவங் கண்டு வருந்திக் கூறியது இது.

22. இச்செய்யுள் கட்குடியனொருவன் துறவியொருவனை நோக்கிக் கூறும் கூற்றாக அமைந்தது.

கள்ளுக்கு நல்லவ ரவர்க்கந்த மந்திர
மிடும்புத்தர் கஞ்ச னுக்கும்
காலங் கழிந்தவர்க டென்னங்க ளுண்பவர்கள்
கடைஞாழ லுடையார் கண்முன்
தெள்ளித் தெளித்தமுது சன்னுசி நீபுதிய
தெய்வங்க ளாடு வதடா
தேவாசு ராதிபர்கள் வாமாதி பூசையி
லெடுத்துப் பொடித்த நுரையைத்
தள்ளித் தெறித்ததொரு விந்துக் கொடுப்பமிகு
சந்துட்ட ராவர் பனவர்
சாமாதி வேதமிவை வாமா கமத்திலுள
தத்வப்ர சித்தி யிதுவே.

## செவிலி இரங்கல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

23. இலங்கை காவல னொருபது முடிகளு
மிருபது தடந்தோளும்
மலங்க மால்வரை யடியினின் மடிதர
மணிவிரல் பணிகொண்டார்
கலங்கள் சேர்கடல் சூழ்கடை ஞாழலங்
கடவுளர் கமழ்கொன்றை
அலங்க லாலினி யென்குறை யென்மக
ளதன்வண மானுளே.

---

அருகந்தமுனி - சைன முனிவனே. கோசாரம் - சைனமுனிவர் பிக்ஷைக்குச் செல்லும் சமயம். (பி - ம்.) 'தோன்றிக் குடத்தை.' சோமாசியாரவர் - சோமாசிமாற நாயனுரளித்த. மந்திரம் - கள். கஞ்சனுக்கும் காலங்கழிந்தவர்கள் - பிரமதேவனைக் காட்டிலும் அதிகமான வாழ்நாளை யுடையவர். சன்னுசி - சந்நியாசி. தெய்வம் கள் ஆடுவதடா. விந்து - துளி. சந்துட்டர், மகிழ்ச்சியுடையோர். பனவர் - அந்தணர்.

இதில் கள் என்னும் பன்மை விகுதி கள்ளென்னும் பானப் பொருளைக் கூறிக்கும்படி தொனியில் அமைந்தது. இங்ஙனம் அமைத்தல் கவிமரபு.

* இச் செய்யுளின் பொருள் தெளிவாக விளங்கவில்லை.

23. மலங்க - மயங்க. கலங்கள் - கப்பல்கள். இனி என்குறை - இனிக் குறையில்லை யென்றபடி. அதன் வணமானுளென்றது பசலை பூத்துக் கொன்றையின் நிறமாகிய பொன்னிறத்தை அடைந்தாளென்றபடி;

### பாங்கி தலைவிக்குத் தலைவன் குறையுணர்த்தல்

(வேறு)

24. ஆனுடைய கொடிவலத்த ரருளுடைய கொடியிடத்த
ரலர்ந்த கொன்றைக்
கானுடைய சடைமுடியர் கடைஞாழன் மருங்கொருவர்
கனிவாய் மாதே
தேனுடைய தழையுடையர் திகைப்புடையர் சிலையுடைய
ரலரே யெய்த
மானுடையர் முருகனிலும் வடிவுடைய ரவர்க்கிதுவென்
வந்த வாறே.

### ஊசல்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

25. வாசக் குழலசைய வாடீ ரூசல்
மகரக் குழையசைய வாடீ ரூசல்
பூசற் கயல்புரள வாடீ ரூசல்
புருவச் சிலைவளைய வாடீ ரூசல்
தேசத் தவரெவர்க்கு மரணு மண்ணல்
திருப்பா திரிப்புலியூர்ச் செல்வ ரீந்த
நேசக் கழல்பாடி யாடீ ரூசல்
நிறைவளையீர் நெஞ்சுருக வாடீ ரூசல்.

### தலைவன் வறுங்களம் நாடி மறுகல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

26. ஊச லாடு மிடத்தில்லை யுறையு மிதணத் துளரல்லர்
பேச லாவ தொருதுணையுங் காணேன் பேணார் புரமாளப்

---

"பானற் கருங்கட் பசுந்தோகை யோகப் பயன்றுய்ப்பவத், தேனக் கலர் கொன்றை சாரூப்பி யந்தந்த செயலோர்கிலார்" (குமர. 553.)

24. ஆனுடைய கொடி - இடபக்கொடி. அருளுடைய கொடி - உமாதேவியார். தழை - தழையும் பூவும் கலந்து செய்த உடை. அலர் ஏ எய்த-பூவாகிய பாணத்தால் எய்த. (பி - ம்.) 'ரிவர்க்கிது.'

25. கயல்: கண்கள்.

26. இதணத்து - பரணில். துணை - இங்கே, தோழி. பேணார் - பகைவர். பூசல் - போர். மானர் - மான்போன்ற தலைவி.

பூசலாடு மரன்கன்னி வனத்துப் புனத்தென் னிறைகொண்ட
மாசிலாத மணிமுறுவன் மான ரெங்கே போனாரே.

(வேறு)

27. போனக மேவிட மேறுவ தேறுடை தோல்புனை பூணரவம்
கானக மேயிட மாகிலு மாதொடு கன்னி வனத்துறைவார்
தேனகு நாண்மல ரோனெடு மான்முத லாகிய தேவரெலாம்
வானக மானவை யாளவு மேவுவர் மீளவு மாறுவரே.

இடம் பெற்றுத் தழால்

(பன்னிருசீர்ச் சந்தவிருத்தம்)

28. மாறிலாமலைக் கொடிபாகர் வாவுபோர்விடைக் கொருபாகர்
மாசிலாமறைத் திருநூலர் மார்பு சேருமுப் புரிநூலர்
நீறு பூசுமெய்த் தவவேடர் நேரி லாதவற் புதவேடர்
நீடு மாமதிற் புடைசூழு நேசர் பாதிரிப் புலியூரில்
ஆறு சூழ்துறைக் கருகாகி யாதி மாதவர்க் கரிதாகி
யாறு கோடிகற் பகநீடி யாடன் மாமயிற் குலமேவி
நாறு தேன்மலர்ச் சுனையாடி நாடு வார்பளிக் கறைகூடி
நாளு மாமிருப் பிடமேவி நாக பூமியொப் பெனலாமே.

தலைமகள் வருந்தல்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

29. ஆமாகி லவர்க்கிப்போ தகல்வ தன்றே
யகன்றிடினுஞ் சிறிதேனு மாற்றே னென்றாற்
றாமாகித் தனிமடவார் தவிர்க வென்றாற்
றவிர்வரோ தமைத்தவிரத் தள்ளி யுள்ளம்

---

27. கானகம் - மயானம். மாறுவர் - மாற்றுவர்; தன்வினை பிற வினைப் பொருளில் வந்தது. ஆகிலும், ஏவுவர், மாறுவர் என்க.

28. மாறிலா மலைக்கொடிபாகர்: "மாறிலா மாதொரு பங்கர்" (தே.) பாகர் - பக்கத்திலுடையவர். அற்புத வேடர் - அருச்சுனன் பொருட்டு ஆச்சரியகரமான வேட வடிவத்தைக் கொண்டவர். கற்பகம் - தென்னை. பளிக்கறை - படிகப்பாறை. நாகபூமி - நாகலோகம்; இது போகத்திற் சிறந்ததாதலின் இங்கே கூறப்பட்டது. இவ்விடமே நாம் அளவளாவுதற் கேற்ற இடமென்பது குறிப்பெச்சம்.

29. அவர்க்கு இப்போது ஆமாகில். அன்று - இயற்கைப்புணர்ச்சிக் காலத்தில். தாம் ஆகி - நாண் முதலாகிய குணங்கள் நீங்கத் தமியராகி.

போமாகிற் போகாமற் புகுந்தாட் கொள்ளும்
புனிதர்திருக் கடைஞாழல் பொருந்தா தார்போல்
யாமாமித் தனியுயிர்கொண் டிருப்போ மன்ப
ரெடுத்தவினை முடிப்பதற்கே யேகு வாரே.

### தலைமகன் கூற்று

(நேரிசை வெண்பா)

30. ஏகாய மென்முலைமே லிட்டா ரிடைகெட்டேன்
ஆகாய மென்னு தலர்புனைந்தார் - மாகாயக்
கைம்மானைச் செற்றார் கடைஞாழ லேயனையீர்
எம்மானைத் தாய்மா ரிரந்து.

### தலைமகளைப் பாங்கி ஆற்றுவித்தல்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

31. இரவ லாளருக் குதவ மாநிதிக்
கென்று கானிடைச் சென்ற வீரர்தேர்
வரவு தாழமுற் படமு கிற்குலம்
வந்த தாமெனச் சிந்தை செய்திடல்
அரவ மேகலைத் தெரிவை வான்முழக்
கல்ல விம்முழக் ககில லோகமும்
பரவு பாதிரிப் புலிசை மாநகர்ப்
பரமர் கோயிலிற் பணைமு ழக்கமே.

---

தவிர்க - பிரிந்து செல்லுதலை ஒழிக. தமையென்றது புனிதரைக் கூறியபடி, யாம் உயிர் கொண்டிருப்போம்; ஆம்: இகழ்ச்சிக் குறிப்பு.

30. ஏகாயம்=ஏகாசம் - உத்தரீயம். கெட்டேன்: இரக்கக் குறிப்பு. மா காயம் - பெரிய உடம்பையுடைய. எம் மானை - எம்முடைய மான் போன்ற தலைவியை. தாய்மாரென்று பன்மையிற் கூறினார், அவர் ஐவகை யினராதலின்; "ஐவர் நலனேம்ப" (சீவக. 363) என்பதும் அதனுரையும் இங்கே அறிதற்குரியன. இரந்து இட்டார், புனைந்தாரென்க.

31. மாநிதிக்கு - பெரும்பொருளை ஈட்டும்பொருட்டு. தாழ - தாமதிக்க. சிந்தை செய்திடல் - நினையாதே. அரவம் - ஒலி. தெரிவை: விளி. வான் முழக்கு - மேகத்தின் முழக்கம். பணை முழக்கம் - முரசத்தின் ஒலி. "வாடை யாயிரு பனியுமாய்" (திருவரங்கக். 86) என்னும் செய்யுள் இதனை ஒருவாறு ஒத்துள்ளது.

பிச்சியார்

32. பணைம தக்கதக் கரியு ரித்தகைப்
பரமர் பாதிரிப் புலிசை நாதர்தம்
துணைம லர்த்திருக் கழல்வ ழுத்துமெய்த்
தொண்டு பாடுசெந் தொண்டை வாயினீர்
இணைசி லைப்பிறைக் கிசைய நீறுகொண்
டிட்ட சுட்டிநெஞ் சுட்டி யிட்டதெம்
உணர்வி ளக்கவோ நகைவி ளக்கினீ
ருயிர்கு றைக்கவோ மயிர்கு றைத்ததே.

வெறிவிலக்கல்

(வேறு)

33. குறைவிளம்ப வயன்முதலோர் காலம் பார்த்துக்
கொற்றவா யிற்புறத்து நிற்ப வேத்தி
மறைவிளம்ப வொருமுனிவன் மைந்தற் கன்பான்
மறிகடலன் றளித்தருள்வோர் வடிவார் கண்டக்
கறைவிளம்ப வருங்கருணை யெல்லை தொல்லைக்
கன்னிவனத் திருந்தவர்க்கென் கன்னி மையல்
இறைவிளம்பத் தவிருமது தவிரா தாற
லெறிவளையீர் வெறிதொடங்கி யென்செய் வீரே.

(வஞ்சித்துறை)

34. என்னை யயர்த்தன
முன்னை வினைத்தொகை

---

32. பிச்சியார் - துறவு வேடம் பூண்ட சைவமகளிர். தொண்டை - கோவைக்கனி. இணை சிலைப் பிறைக்கு - இரண்டாக இணைந்த வில் போன்ற புருவங்களையுடைய பிறைபோன்ற நெற்றிக்கு. நெஞ்சுள் தீயிட்டது; தீயென்பது குறுகி நின்றது. உணர்வை இளக்கவோ; இளக்க - உருக்க. நகை - சிரிப்பு.

33. அரசருடைய அரண்மனைவாயில் கொற்றவாயிலென்று கூறப்படும். மைந்தற்கு - உபமன்யு முனிவனுக்கு. கருணையெல்லையைக் கண்டக் கறை விளம்ப. இறை விளம்ப - சிறிதளவாவது சொன்னால். வெறி - வெறியாடல்.

34. இறைதன்னை (நான்) நினைக்க, வினைத்தொகை என்னை அயர்த்தன; அயர்த்தன - மறந்தன.

கன்னி வனத்திறை
தன்னை நினைக்கவே.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

35. தன்னையா னினைப்பத் தந்து தலையளிப் பதற்கு நாயேன்
பின்னையான் செய்யுங் கைம்மா றறிகிலேன் பெருமை யாலே
முன்னையா ரணங்க ளோதும் பாதிரிப் புலியூர் மூர்த்திக்
கென்னையாட் கொடுப்ப தன்றி யேழையே னென்செய் கேனே.

(நேரிசைவெண்பா)

36. செய்ய கரிய திகழ்கண் மணிப்பாவை
ஐய வரியவே யானாலும் - நெய்தல்
கழியெலாம் பூக்குங் கடைஞாழல் காணு
விழியெலாங் காணு விழி.

பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றல்

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

37. விழியி னீளமொரு கிழியி லேமுடிய
வெழுதி மீளமுலை யெழுதுவீர்
ஒழியு மேயிதனை நினைவு ருதுபனை
மடலி ஞளைவர வுரைசெய்தீர்
கழியில் வானைவய லிடையு லாவுகடை
ஞாழ லாதிகர மானனார்
மொழியை நேரிடையை நடையை வேறெழுத
வியலு மாகிலிது முயலுமே.

---

35. ஆட்கொடுப்பது - அடிமையாகக் கொடுப்பது.

36. விழி: எழுவாய். மணிப்பாவையையும் அழகிய அரியையும் உடையவானாலும். "கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்" (பிரமோத்தரகாண்டம்.)

37. மடலேறுவேனென்ற தலைவனை நோக்கித் தோழி கூறியது.

கிழி - படம். முடிய - முற்ற. இதனை நினைவுருது ஒழியும் - இவ்வாறு எழுதுதலை நினையாமல் ஒழிவீராக. வர - வருவதாக. கரமான் அனார் - திருக்கரத்திலுள்ள மானைப்போன்ற தலைவியினது. நேர் இடையை - நுணுகிய இடையை. இயலுமாகி லென்றது, இயலாதென்னும் குறிப்பினது.

## தலைவன் தலைவிஇன்றியமையாமை இயம்பல்

(வேறு)

38. முயலி னுறுதுய ரகல வருள்புரி
முதல்வர் வளரிள முகிழ்முலைக்
கயலி னிகர்வரு நயனி யிடமகிழ்
கடவு ளுறைகடை ஞாழல்வாய்
இயலின் மயிலனை யவளிரா டெறிதிரை
மருவி யிடையிடர் படவரும்
புயலி னழகிய் குழலி நனைதுகில்
புலர வெனதுயிர் புலருமே.

(கட்டளைக் கலித்துறை)

39. புலவர்க் கருளும் பொருளுடைத் தாய்ப்புய நான்குடைத்தாய்க்
கலவக் குலமயில் பங்குடைத் தாய்க்கன்னி காவனத்தே
பலவற் புதமலர் காட்டிய கோட்டுப்பொற் பாதிரிக்கீழ்
நிலவச் சுடர்முடிக் குன்றடி யேனுக்கு நேர்பட்டதே.

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

40. பண்ட ரங்க நடித்த நாளி லடுத்த நீறு பரம்பிவெண்
கொண்டல் வந்து படிந்த பொன்வரை யொக்கு மேனி குனித்தநாள்
அண்ட முட்ட வழற்ப ரப்பு மகற்ப டுத்ததை யொக்குமெய்
கண்ட தென்கடை ஞாழ லாதிபர் கையில் வைத்த கபாலமே.

---

38. தூமப்பரென்னும் முனிவருடைய சாபத்தால் முயல்வடிவம் பெற்ற மங்கண முனிவர் இத்தலத்தில் வந்து வழிபட்டு அவ்வடிவம் நீங்கப் பெற்றனரென்பது புராண வரலாறு; "முன்ன நின்ற முடக்கான் முயற் கருள் செய்துநீள், புன்னை நின்று கமழ்பா திரிப்புலி யூருளான்" (தே. திருஞா.) இயல் - இங்கே, சாயல். துகில் நனைந்திருப்பின் உறுப்புக்கள் தோன்று மென்பது தலைவன் கருத்து.

39. பொருள் - இறையனுரகப்பொருள்; புலவர், ஞானியரென்று கொண்டு, பொருள் முத்தியென்று பொருள்கோடலும் பொருந்தும். கலவம்- தோகை. மயிலென்றது உமாதேவியாரை. பாதிரிமரம் பல மலர்களைப் பூத்த செய்தி 3,44 - ஆம் செய்யுட்களிலும் காணப்படும். நிலவு அ சுடர் முடி; அ: நெஞ்சறி சுட்டு. நேர்பட்டது - தரிசித்தற்கு எளிதாயிற்று.

40. பண்டரங்கம் - பாண்டரங்கமென்னும் கூத்து. பரம்பி - பரவி. நீற்றுக்கு வெண்மேகம் உவமை. கபாலம் அகலை ஒத்தது. மெய் கண்ட - உண்மையாகக் காணப்பட்ட. சிவபெருமான் அகலேந்தி யாடுதலை, "வரிகொ

## மடக்கு

(கட்டளைக் கலிப்பா)

41. பாலற் கீவரப் பாலின் பரப்பையே
படர்ச டாடவிப் பாலின் பரப்பையே
ஆல முண்ப ரயிலம் புரக்கவே
யரணி லெய்வ ரயிலம் புரக்கவே
கோல மல்லது பாடல சாகையே
கூத்தர் மேவுபொற் பாடல சாகையே
காலந் தோறுந் தரும்பிற போதுமே
காண லாங்கடை ஞாழலெப் போதுமே.

## கற்றறி பாங்கன் கழறல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

42. ஞாழலிற் போதி தத்தந் தலைப்பெய்து நறும்பூந் தாழைச்
சூழலுக் கருகே சோதி பாதிரிப் புலியூர்ச் சோலை
நீழலிற் பன்மான் சூழ நின்றமா னென்றுக் குள்ளம்
தாழலிற் பெரிய மேன்மை யழிவதோ தக்க வாறே.

---

ளரவு மதியுஞ் சுழலக், கரியக லேந்தி யாடுமே, கரியக லேந்தி யாடு மிறைவன், புரிபுன் சடைமேற் புனலும் பிறழவே" (யா. வி. 76 மேற்.) என்னும் செய்யுள் விளக்கும். அவர் திருக்கரத்தில் அகலுண்மை, "தமருகமுங் கரியகலும்" (தே. சுந்தர.) என்பதனாலும் பெறப்படும்.

41. பாலற்கு - உபமன்னியு முனிவருக்கு. பாலின் பரப்பை - பாற் கடலை. சடாடவிப்பால் அப்பு ஐ இன்பர் - சடைக்காட்டினிடையே வைத்த கங்கையின் அழகினால் இன்பமுடையவர். அயிலம் புரக்க - அகிலத்தைப் பாதுகாக்க; அயிலம் - அகிலம். அயில் அம்பை உரக்க அரணில் எய்வர் - கூர்மையையுடைய அம்பை வன்மைபெறத் திரிபுரத்திலே எய்குவர். சாகை கோலமல்லது பாடல - வேதசாகைகள் சிவபிரானது திருக்கோலத்தையல்லது பிறவற்றைப் பாடாதனவாம். கூத்தர் மேவு பொன் பாடல சாகை - சிவபெருமான் விரும்பிய பொலிவுபெற்ற பாதிரிமரத்தின் கிளைகளில். காலந்தோறும் தரும் பிற போதும் காணலாம் - தத்தமக்குரிய காலத்தில் தரப்படும் பிற மலர்களையும் காணலாம். கடைஞாழலில் பாடலசாகையில், பிறபோதும் எப்போதும் காணலாமென்க.

42. ஞாழல் - புலிநகக்கொன்றை. தத்தமென்றது தோழியரை. தலைப்பெய்து - தலையின்கண்ணே சூடி. சோதி - சிவபெருமான். பன்மானென்றது பல தோழியரை. நின்றமான்: தலைவி. தாழலின் - தங்குதலினால். தக்கவாறு - தக்க நெறி. இது நினக்குத் தக்கதன்றென்பது கருத்து.

## மதங்கு

* (பதினான்குசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

43. தக்க னென்று தலைக்கு லைத்தவ ரங்கி ருக்க விருப்புடைத்
தையல் பங்குடை யையர் செய்ய தழற்பொ றித்தறு கட்பனைக்
கைக்க ருங்களி றென்று ரித்த கரத்தர் தென்கடை ஞாழலெங்
காள கண்டர் திறம்பு கழ்ந்தெதிர் மீள விட்ட பதத்திடைப்
புக்கு நின்று புரிந்த ரங்கின டந்து வந்து புகுந்துகைப்
போதெ டுத்து நடத்து வாண்முக மீதெ டுத்திரு காதின்மேல்
மைக்க ருங்கயல் சென்று மீள மதங்கி தாள விதங்களால்
வந்த சாதி யெடுக்கின் மாமறை தந்த சாதி மயங்குமே.

44. *சாதி பேத விகற்ப மாவன நற்பு தாதி சடங்கள்சந்
தர்ப்ப மல்லது தத்வ பேத மநேக மாவ தணுக்குளே
நீதி நீதி யெனக்க ளித்து நினைக்க நின்ற வனைத்தினும்
நிற்ப தொன்றுள தென்று நாமு னிருந்த நேமி வரைப்புறத்
தாதி தென்கடை ஞாழ லாதி யகண்ட ரூபி யரிக்கெய்தாய்
அன்ப ரான பசுக்கள் பாச மறுக்கு மத்த வராகமெய்
சோதி ஞான முரைக்க வந்தது சாதி யேதிது நிற்கநீ
சுத்த ஞாக வனுக்ர கித்தது மித்தை யேநினை நித்தமே.

## தவம்

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

45. நித்தில முறுவற் பவழவாய்ப் பிறழுங்
கயல்விழி நிரைவளை யிடமாக்
கைத்தலத் திருந்த புள்ளிமான் மறியர்
கடிலமா நதியதன் வடபாற்

---

(பி - ம்.) * எழுசீர்க் கழி நெடிலடி இரட்டை யாசிரிய விருத்தம்.

43. மதங்கு - மதங்கி; இவள் வாளைச் சுழற்றி ஆடுபவள். ஒன்று தலை - ஒருதலை; "ஒன்று தேரினல்" (சீவக. 417.) அங்கு - அந்தப் பங்கில். பணைக்கை - பனை போன்ற துதிக்கை. பதம் - கால்; இங்கே காலடி கயல்: கண். தாள விதங்கள் - தாள வகைகள். சாதி யென்பது கூத்து விகற்பங்களை. மறைதந்த சாதி - வேதியர்.

44. (பி - ம்.) தாழிசை.

* இச்செய்யுளின் பொருள் விளங்கவில்லை.

45. நிறைவளை : உமாதேவியார். மான்மறியர் - மான்கன்றை யுடையவர். (பி. - ம்.) 'மறியக்.' கடில மாநதி - கெடிலநதி. கெடில

செய்த்தலைக் குவளை மகளிர்கண் காட்டுந்
திருக்கடை ஞாழலி லிருந்த
பைத்தலைத் துத்திப் பணியணி யாரப்
பரமர்தாள் பணிவது வரமே.

### மறம்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

46. வரிக்கறையா னரித்தபனஞ் சருகோ தூதா
மண்ணரசர் திருமுகமாய் வந்த தெங்கள்
அரிக்கயல்வாள் விழிக்குயிலைத் தருக வென்றால்
அவனிதன்மேற் பரிசமழ கியதே யன்றோ
கரிக்கரட வரைபடுத்த கன்னி காப்புக்
கருவேடன் மகன்புணர்ந்த பெருவே டன்பெண்
திருக்குலமென் றறிந்திலனோ நன்று வென்றிச்
சிலைகொடுவா தலைகொடுவந் திடுவ தற்கே.

---

நதிக்கு வடபால் இத்தலம் இருப்பதாக இதிலும், 100-ஆம் செய்யுளிலும் கூறப்பட்டுள்ளது; இப்போது இத்தலம் தென்பாலுள்ளது. இந்நூலாசிரியர் காலத்திற்குப்பின் நதியின் போக்கு மாறியதுபோலும். இத்தலபுராணம், மாணிக்கவாசகர் பொருட்டாகக் கெடிலநதியின் போக்கு மாறியதென்று கூறும். பை - படம். துத்தி - படப்பொறி. பணியை அணியாகவும் ஆரமாகவும் உடைய பரமர். வரம் - தவஞ்செய்வதைக் காட்டிலும் மேலானதாகும்.

46. மறக்குடியிற் பிறந்த பெண்ணொருத்தியை மணஞ் செய்துகொள்ள எண்ணிய அரசனிடமிருந்து வந்த தூதனைப் பார்த்து அப்பெண்ணின் தந்தையாகிய மறவன் கூறுவது; இது மகட்பாற் காஞ்சியென்னும் புறத்திணைத்துறையின்பாற் படும். பனஞ்சருகு - பனையோலை; "தீண்டரிய மடற்பனையின் சருகை வாரி" (அருவணக். 70.) எழுதப்பட்ட ஏட்டைப் பார்த்துக் கறையானரித்த தென்றான். சருகோ திருமுகமாய் வந்தது? அவனி - பூமி. பரிசம் - பெண் வீட்டாருக்குத் தரும்பொருள். யானையாகிய மதத்தையுடைய மலையைச் சங்கரித்த. கருவேடன் - சிவபெருமான்; அருச்சுனனுக்கு அருளும்பொருட்டு வேடவடிவம் பூண்டமையின் இங்ஙனம் கூறினான். அவர் மகனென்றது முருகக்கடவுளை. வேடன் பெண் - வள்ளி நாயகி. 'நன்று' என்ற வரையில் தூதனைப் பார்த்துக் கூறியவை; மேல் உள்ளவை தன் அருகிலுள்ளவனைப் பார்த்துக் கூறியன. தலை - அரசனது தலையை.

(வேறு)

47. இடிக்குமெரு தொன்றுதனி லேறிவரை மார்பத்
தென்புவரி யாமையொ டிலங்கெயி றழுந்தக்
கடிக்குமர வங்களு மணிந்துபலி கொள்ளக்
கன்னிவன நாதர்கடை யின்புற நடந்தால்
அடிக்குமது மாலைபுனை வார்குழலின் மீதே
யாரமணி வார்முலையி லஞ்சன மளிப்பார்
வடிக்குநெடு வேல்விழியின் மென்களப முய்ப்பார்
வல்லியர் தொடங்குவன சொல்லமுடி யாவே.

தலைவன் கூற்று

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

48. சொல்லொன்று கவிக்கரசைத் துகில்புனையா தவர்கடலிற்
றொடுத்து விட்ட
கல்லொன்று புணையாக்கிக் கரையேற்றும் பிரான்கன்னி
வனமே யன்னீர்
வில்லொன்றை நுதலாக்கி விழியிரண்டைச் சரமாக்கி
வேளை வாளா
நில்லென்று நீரேபோ யவனாண்மை தனைச்செலுத்தி
நிற்கின் றீரே.

---

47. சிவபிரான் பலிகொள்ள வருங்கால் மகளிர் மயலுற்றுச் செய்யும் செயல்கள் கூறப்படும்.

இடிக்கும் - இடிபோல முழங்கும். கடையின்புறம் - வாசல் வழியே. மதுமாலையை அடியிற் புனைவார். ஆரம் - மார்பில் அணியும் முத்துமாலை. அஞ்சனம் - கண்ணுக்கிடும் மை. களபம் - சந்தனக் குழம்பை. வல்லியர் - மகளிர். தொடங்குவன - செய்ய ஆரம்பித்த செயல்கள்; "தாருடுத்துத் தூசு தலைக்கணியும் பேதையிவள்" (நூற்றெட்டுத் திருப்பதி. 53.)

48. கவிக்கரசை - திருநாவுக்கரசு நாயனாரை. துகில்புனையாதவர் - சமணர். தொடுத்து - கட்டி. புணை - தெப்பம். கரையேற்றும்பிரான்: கரையேற விட்டவரென்பது இத்தலத்துமூர்த்தியின் திருநாமங்களில் ஒன்று. திருநாவுக்கரசு நாயனாரைக் கடலினின்றும் கரையேற விட்டதுபற்றி இது வழங்கலாயிற்று. அவர் கரையேறிய இடம் இப்போது கரையேறவிட்ட குப்பமென வழங்குகின்றது. நுதலை வில்லாக்கி. வாளா நில் - சும்மாநில். அவன் ஆண்மையென்றது நெஞ்சிற் காமம் மூளும்படி அவன் செய்யும் போரை.

### புனறரு புணர்ச்சியால் அறத்தோடு நிற்றல்

(சந்தவிருத்தம்)

49. நினைபவர் தீவினை யான துரந்தவர்
நிலநெடு வானுல காளவ ரந்தரு
நிருமலர் பாதிரி நீழ லமர்ந்தவர்
நிரைவளை வாண்கை மாதொ ருபங்கினர்
கனமுழ வோடிசை கூட நடம்புரி
கனகச பாபதி பானன் மணங்கமழ்
கழிபுடை சூழ்கடை ஞாழல் விரும்பிய
கடவுளர் சேர்கயி லாய மருங்கொரு
சுனையிடை யாழ்புன லாட விழைந்திவள்
துறைவழு வாவிழ லாய லமந்துறு
துயர்படு போதிரு தோளின் விழுந்திவள்
துணைமுலை தோளொடு கூட முயங்குபு
வினைபுனை வார்குழ லாளை யதன்கரை
மிசைவசை யோடிசை யாவ கைதந்தொரு
விடலைமு னேகினன் யான துகண்டனன்
விளைவறி யேனினி மேல்வி திநின்றதே.

### சம்பிரதம்

(*பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

50. நின்ற குலக்கிரி யெட்டையு மெட்டி
வளைப்பன் மறித்திவையே
நிலைபெறு விப்பனி நீள்வல யத்தையோர்
சிறுகடு குட்பொதிவன்

49. துரந்து - போக்கி. அவர் - நினைபவர்; எழுவாய். நிலத்தையும் நெடிய வானையும். பானல் - குவளைமலர். இவளென்றது தலைவியை. வழுவா விழலாய் - வழுக்கி விழுபவளாகி. தோளின் - தோள்வலியால். வினைபுனை - கைத்தொழில் அமைந்த. வசையோடு இசையா வகை - பழியோடு பொருந்தாதபடி. விடலை - தலைவன். முன் - முன் ஒரு காலம். இனி விளைவதை அறியேன்; அது இத்தலைவியின் விதியின்கண் நின்றது.

50. * (பி - ம்.) அறுசீர்க்கழிநெடிலடி இரட்டையாசிரியவிருத்தம்.
சம்பிரதம் - பிறர் செய்தற்கரிய செயல்களைச் செய்வதாகக் கூறுதல்; பொய்யென்றும் கூறுவர்.

சென்று குளிப்பன் முகிற்படலத்து
மறித்து நிலத்திழிவன்
திகையை விழுங்குவ னிவையல வித்தை
திருந்தலர் விட்டவுழைக்
கன்று தரித்த கரத்தமு தக்கடல்
கன்னி வனப்பெருமான்
கழனினை யாதவர் புரிபெரு வேள்வி
கலங்கி நடுங்கவளைத்
தன்று கணத்தொடு சென்று திகைப்ப
வடங்க வுறுப்பழியா
அமர னெருத்தனை வரவு மழைப்பனி
வவனி தலத்திடையே.

### கைக்கிளை - ஐயம்

(கலிச்சந்தவிருத்தம்)

51. தலைவானவர் தலைமாலைகண் மிடைதாழ்சடை மிசையோர்
கலைவான்மதி புனைமேலவர் கடைஞாழலை யுடையார்
மலைவாய்வனி தையரோபொரு மகராலய வனசத்
தலைவாய்வரு மமுதோடெழு மவரோவரு மிவரே.

### தலைவியிரங்கல்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

52. வருந்தாத வகைநாங்கள் வருந்தத் தேங்கி
வளர்மாவின் றளிர்கோதி மலர்ந்த காஞ்சிக்

---

மறித்து - மீட்டும். இ நீள் வலயத்தை - இந்தப் பெரிய பூமியை. குளிப்பன் - மறைவேன். படலம் - தொகுதி. திகையை - திசையை. திருந்தலர் - தாருகாவனத்து முனிவராகிய பகைவர். உழைக்கன்று - மான்கன்று. நினையாதவர் - தக்கனும் அவனுக்கு உதவியாக இருந் தோரும். கணத்தொடு - பூதகணங்களோடு. அமரன் - தேவன். உறுப் பழியா அமரனெருத்தனை வரவும் அழைப்பனென்றது அங்ஙனம் ஒருவனும் இலனென்னும் கருத்தை யுட்கொண்டது. வரவும்: உம்மை, உயர்வு சிறப்பு.

51. தலைவானவர் - தேவர்களுள் முதன்மையானவர். (பி - ம்.) 'புனை வேணியர்.' உடையாரது மலைவாய். மகராலயம் - கடல். வனசத்து - தாமரையில். அமுதோடெழுமவர் - திருமகள்.

52. இதுகாறும் நாங்கள் வருந்தாத வகையில் வருந்த. தேங்கி - தங்கி. ஆல - கூவ. பொன்றும் காலம் - பிரிவாற்றுமையால் யான் இறத்

கருந்தாது புரைநிறத்துக் குயில்க ளாலக்
கண்டாலும் வாரார்கொல் கன்னி காப்பர்
திருந்தாதார் புரமூன்று மெரித்த மேருச்
சிலையினர்பா திரிப்புலியூர்ச் செல்வர்க் கன்பு
பொருந்தாதார் மனம்போலப் பொன்றுங் காலம்
பொருள்வேண்டி யருண்மறந்து போயி னாரே.

பாங்கி புலம்பல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

53. போயின கைவளை வந்தது மால்புகை கின்ற துயிர்ப்படரும்
தீயென வந்தெழு கின்றது திங்க டிருக்கடை ஞாழலின்வாய்
ஆயின செஞ்சடை யந்தணர் கொன்றை யளித்தில ராயர்தம்வேய்
வாயின தெங்கண் மடந்தைத ணுருயிர் மாரனும் வெம்பகையே.

கைக்கிளை—துணிவு

(மருட்பா)

54. கைத்தா மரைவையார் காற்று மரைநிலத்து
வைத்தா ரிமைத்தா மரையிமைத்தார் - இத்திறத்திற்
போதுறை மகளி ரல்லர்
பாதிரிப் புலியூர்ப் பாவைய ரிவரே.

---

தற்குரிய காலத்தில். அருள் மறந்து பொருள்வயிற் பிரிதல் : "அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து, பொருள்வயிற் பிரிவோர்" (குறுந். 20); "அருளி லாளர் பொருள்வயி னகல" (அகநா. 305.)

53. மால் வந்தது - காமமயக்கம் உண்டாயிற்று. உயிர்ப்பு புகை கின்றது - மூச்சு வெம்மையை அடைந்தது. செஞ்சடையந்தணர் - சிவ பெருமான். ஆருயிர் ஆயர்தம் வேய்வாயினது; வேய் - புல்லாங்குழல். அஃது ஒலிக்குமாயின் இவள் உயிர் நீங்குமென்பது கருத்து.

54. இத்தலைவி திருமகளல்ல ளென்பதற்குரிய காரணங்களைத் தலை வன் கூறுகின்றான்.

கை தாமரை வையார் - கையில் தாமரைமலரைப் பிடியார். காலாகிய தாமரையை. இமைத் தாமரை - கண்கள். கையில் தாமரையைப் பிடித்தலும் கால் நிலத்திற்படாமையும் இமையாமையும் திருமகள் இயல்புகள். இத்திறத்தின் - இவ்வியல்புகளால்.

### பாங்கி புலம்பல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

55. பாவலர் பரவுந் தமிழ்மொழி யரசும் படிபுகழ் தருகாழிக்
காவலர் நிலவுங் கவுணியர் முதலும் பரவிய கடைஞாழற்
சேவலர் கொடியெஞ் சிவன்முடி யணியுந் திருமலர் தரின்வாழும்
கோவலர் குழலுங் குளிர்மதி யழலு மிவள்குறை நிறையாவே.

(நேரிசையாசிரியப்பா)

56. நிறைபல் வளந்தரு மறைபுனற் பழனத்துக்
கடல்விளிம் படுத்த கண்ணகன் செறுவிற்
பொன்னிறச் செந்நெல் வித்தி நன்னிற
வெள்ளிக் கொழுமுளை யொழுக்கித் தெள்ளிய
மரகதச் செழுஞ்சுருள் விரிதரப் புரைதப
அடிமுதற் பணைத்த கிளைய வாகி
நடுநா ளமயங் குறுக முடியமைத்துக்
கருங்கை மள்ளர் பெரும்பகடு பூட்டிப்
பவளப் பல்கொடி முறியத் தவளச்
சங்கின மிரியல் போகப் பங்கயச்
செழுமலர்ப் பன்முகங் கிழியக் கொழுமடுத்துக்
கதலிக் கனியின் கமழ்சேறு படுத்துப்
பதவிய சோலைப் புதுக்கோட் பலவின்
மாந்துறு பெரும்பழ மழையெனச் சொரியும்
தீந்தே னீத்தம் பாய்ச்சி மாவின்

---

55, அரசு - திருநாவுக்கரசு நாயனார். படி - உலகம். காழிக்காவலராகிய கவுணியர் முதல்; ஞானசம்பந்தர். சே - இடபம். வாழும் - இத்தலைவி வாழ்வாள். குறை நிறையா வென்றது குறையை நீக்கமாட்டா வென்னும் கருத்தினது.

56. (க) அறை - ஒலிக்கின்ற. பழனம் - மருதநிலம். (உ) செறு - வயல். (ங) பொன்னிறச் செந்நெல்: நாலடி. 269. (பி - ம்.) 'செந்நிறச் செந்நெல்.' வித்தி - விதைத்து. (ச) முளை - நெல் முளையை. (ரு) சுருள் - நெற்பயிரின் இலைச்சுருள். புரைதப - குற்றம் நீங்க. (பி - ம்.) 'தவ.' (எ) நடுநாள் - நடுகின்ற நாள். முடி - நாற்றுமுடி. (அ) பகடு - எருது; எருமைக் கடாவுமாம். (கூ) பவளக்கொடி, இயல்பாக வயலில் உள்ளது. தவளம் - வெண்மை. (க0) இரியல்போக - கெட்டு நீங்க. (கக) கொழு - கலப்பையின் முன்னுறுப்பு. (கங) பதவிய - மெத்தென்று பதப்பட்ட.

கொழுங்கனி வண்ட லோட்டிச் செழுங்கொடி
நாறுநாட் செய்யு மாறுசூழ் வளவயற்
சீத வார்பொழிற் பாதிரிப் புலியூர்
யாமினிப் புகழுவ தெவனோ மாமுனி.
கரத்திற் கண்ணுடை யவனும் வரத்திற்
றாளி னாட்டத் தவனும் வாள்வரிப்
புலிக்காற் பெரும்பெயர் முனியு மொலித்திரைப்
பாலின் பரவைபெற் றவனு ஞால
மதஞ்சலி கூப்பும் பதஞ்சலி யண்ணலும்
என்றிவர் முதலா மிருந்தவத் தலைவர்
பொன்றிகழ் புரிசடைப் புனிதனை வணங்கி
அன்ன தமையா ததனிடை யுற்றனர்
இன்னு மதன்றிற மியம்பிற் பொன்மலை
வல்லி மாதவம் புரிந்தன ணல்லிசை
நாவினுக் கரசனு ஞானசம் பந்தனும்
பாவினன் மாலையாற் பரமனைப் புகழ்ந்தனர்
பனிமதி வெண்குடைப் பருதிகுல முதல்வனும்
மனுநெறி பேணு மாதி ராசன்
முயல்வடி வாகிய முனிவனை யெறிந்து
மயலுறு தீவினை மாற்றுதற் பொருட்டால்
வடதிசை மருங்கிற் போகிப் படிபுகழ்
அந்தரு வேதி குறுகி யதன்வயிற்
செந்தீ மூன்றுஞ் செவ்விதின் வளர்ப்போர்
வீறுசால் சிறப்பின் விழுக்குடிப் பிறந்தோர்

---

(கரு) நீத்தம் - வெள்ளம். (கஎ) நாட்செய்யும் - விழாக் கொண்டாடும். (ககூ) புகழுவதெவன் - புகழ்ந்துரைப்பது என். (பி - ம்.) 'புகலுவ தெவன்.' (ககூ - உ0) கரத்திற் கண்ணுடையவனாகிய மாமுனி. (உக) தாளில் நாட்டத்தவன் - அக்ஷபாதர்; கௌதமர். (உஉ) வியாக்கிரபாதர். (உ௩ - ச) பரவை பெற்றவன் - உபமன்னியு முனிவர். ஞாலமது அஞ்சலி கூப்பும். (உஎ) அன்னது அமையாது - வணங்குதல் மாத்திரம் போதாமல். அதனிடை - அத்தலத்தில். (௩௩) மாதிராசன் : இப்பெயர் ஆதிராசனென இத்தல புராணத்தில் காணப்படுகின்றது. (௩ச) முனிவன் : அம்பிகை சாபத்தால் முயல் வடிவம் பெற்ற உபமன்னியு முனிவர். இச்செய்தி திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம், உபமன்னியர் சாபந்தீர்ந்த சருக்கத்தால் உணரலாகும். (௩எ) அந்தருவேதி - காசி.

ஆறறு பதின்ம ரந்த ணாளர்
நீற்றொடு சிறந்த நெற்றியர் நாற்றிசை
தருமறை தெரிந்த நாவினர் பரிவொடு
சிவன்வீற் றிருந்த சிந்தையர் தவநெறி
அருளொடு தயங்கிய தன்மையர் தம்மொடு
தன்னெதிர் போகாத் தண்டமிழ் வைப்பிற்
கன்னி காவனங் குறுகி யன்னர்
இருமூ வறுப திசைந்த வாண்டிலங்
கொருவ ரொருதின முரிமை பூண்டு
திருக்கடை ஞாழலிற் சிவக்கொழுந் ததனை
அருச்சனை செய்ய வுமர்ந்தினி திருந்தனன்
இனியன பலவு மிடர்கெட விரித்து
விண்ணவர் புகழி னல்லது
மண்ணவர்க் கிப்பதி வழுத்தலோ வரிதே.

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

57. அரியானு மயனானு மமர ரானு
மருண்முனிவர் பலரானு மளவு கூறத்
தெரியாத திருவுருவ முடைய சோதிச்
சிவக்கொழுந்தை நினைந் துருகிச் சிறந்த காதற்
றரியாத வகைபெருகப் பரமா னந்தத்
தனிக்கடல்வாய் விழுந்தெழுந்து தடங்கண் மாரி
சொரியாத புனல்பெருகுந் தொண்ட ரோடுந்
தோற்றுவார் பவக்கடலை மாற்று வாரே.

---

(௪௰) ஆறறுபதின்மர் - முந்நூற்றறுபதின்மர்; "பழந்தொண்ட ரொரு முந்நூற் றறுபதின்மர்" (60) என்பர் பின்னும். (௪௫) எதிர்போகா - நிகரில்லாத. (௪௭) இருமூ வறுபது இசைந்த ஆண்டில் - முந்நூற்றறுபது நாட்கள் பொருந்திய வருடத்தில். (பி - ம்.) 'இருமூவொருபது.' (௪௯) சிவக்கொழுந்து : இத்தலத்து மூர்த்தியின் திருநாமங்களுள் ஒன்று.

மாதிராசன் (௩௩) இருந்தனன் (௫௰.)

57. தரியாதவகை - அடக்கமுடியாதபடி. மாரிசொரியாத புனல் கண்ணிற் பெருகும்.

(கலிவிருத்தம்)

58. மாற்றுவார் மறலியை மலர வன்சிரத்
தூற்றுவார் கரியவ னுதிரந் தீயிணைப்
போற்றுவார் பாதிரிப் புலிசை யார்தொழத்
தோற்றுவார் சுரிகுழற் றோகை பாகரே.

பாங்கி தலைமகனை இரவுவரல் விலக்கல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

59. பாக வான்மதி புனைசடை முடியினர் பாதிரிப் புலியூரின்
மேக வாகன ரடிபணி யலரென வெங்கரி திரிகானில்
நாக வாயுமிழ் நவமணி யொளிதர நள்ளிரு டனினீவந்
தேகவா னுத லுய்கில ளையனே யிரவர லொழிவாயே.

தலைவன் வேட்கைதாங்கற்கருமை சாற்றல்

(வேறு)

60. ஒழியாத பழந்தொண்ட ரொருமுந் நூற் றறுபதின்ம
ருளமெப் போதும்
கழியாத சேவடியான் கன்னிவனத் தொருசிறுமான்
கவர்ந்த துள்ளம்
மொழியாத லம்மானின் முறுவலிள நிலவாதன்
முகத்து லாவும்
விழியாதல் கொண்டன்றி வேறொன்று லிந்தமயன்
மீட்கொ ணாதே.

---

58. மறலி - யமன். மலரவன் சிரமென்றது பிரமகபாலத்தை. கரியவன் - திருமால். தீயிணைப் போற்றுவார் - அந்தணர். அவர் வாழும் பாதிரிப் புலிசை. தோகை : இத்தலத்து அம்பிகையின் திருநாமங்களுள் தோகை நாயகியென்பது ஒன்று.

59. பாகவான்மதி - அர்த்த சந்திரன் ; "பாதிசேர் பிறையர்" (98) என்பர் பின் ; "பாதி மதிநதி போது மணிசடை நாதர்" (திருப்புகழ்) மேகவாகனர் - சிவபெருமான் ; "மேகந லூர்தியர்" (தே. திருநா. திருப்புகலூர்) ; காஞ்சிப் புராணம், புண்ணிய கோடீசப் படலம் 3-ஆம் செய்யுளைப் பார்க்க. ஏக - போதலால். நவமணி - புதிய மணி. இரவரல் - இரவில் வருதலை,

60. சிறுமானென்றது தலைவியை என் உள்ளத்தைக் கவர்ந்தது. மொழியாதல் - மொழியாவது. நிலவாதல் - நிலவாவது. விழியாதல் - கண்பார்வையாவது.

*செவிலி சுவடுகண்டு இரங்கல்

(†பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

61. மீளி திருந்தடி யிங்கிவை யுங்குவை
வெவ்வினை யேனுடைய
மெல்லியன் மெல்லடி வேலை கொளுந்த
விழித்துயி ருண்டுவரும்
காளிமு னின்று நடம்புரி கண்ணுதல்
கன்னி வனப்பெருமாள்
கவுரி மனோகர ரைப்பிரி யாத
கருத்துடை யார்வினைபோல்
ஆளி மறிந்து விழுந்து கிடந்தது
மற்புத மேயிதுவும்
அண்ண லிடந்திகழ் வண்ண நெடுஞ்சிலை
கால்வளை வித்ததனின்
வாளி துரந்திட வந்து விளைந்தது
மற்றது வெங்கதிர்வேல்
மன்னனு மங்கையு மின்னுயி ரொன்றொடு
சென்ற வழிச்சுவடே.

---

61. (பி - ம்.) * கிழவி. † பன்னிருசீர்க்கழிநெடிலடி இரட்டையாசிரிய விருத்தம்.

மீளி - தலைவனது. உவை - தலைவியின் அடிகள். வேலை கொளுந்த - கடல் எரிய. ஆளி - அத்தியாளி; சிங்கமுமாம். இதுவும் - இவ்வாறு ஆளி விழுந்து கிடத்தலும். அண்ணல் - தலைவன். கால் வளைவித்து - இரு கோடுகளையும் வளைத்து. அதனின் - அதனால். வாளிதுரந்திட - அம்பை எய்ததனால். அது : தொகுதியொருமை.

முதலில் தலைவனது அடிச்சுவடும் தலைவியினது அடிச்சுவடும் அவற்றி னிடையே இறந்த ஆளியும் கண்டாள். அவற்றால், தலைவன் தலைவியைச் சேய்மையில் நிறுத்தி, எதிர்ப்பட்ட ஆளியைக் கொன்றானென்பதை அறிந் தாள். பின் இருவர் சுவடுகளும் இணைந்து சென்றமையின் இருவரும் சேர்ந்து சென்றனரென்று அறிந்தனள்.

## மேகவிடுதூது

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

62. வழிப்பட்ட கருமுகில்காண் முற்பட்டென் வரவுரைமின்
மலர்ந்த புன்னை
கழிப்பட்ட புலவகற்றுங் கடைஞாழன் மருங்கிரண்டு
கயல்போ னீண்ட
விழிப்பட்ட புனலுந்தன் மெய்ப்பட்ட பசலையும்பொய்ப்
பட்ட வாழிச்
சுழிப்பட்ட விரற்றளிருந் துயர்ப்பட்ட மனமுமுடைத்
தோகை யாட்கே.

## தலைவன் நெஞ்சொடு கிளத்தல்

(வேறு)

63. தோகையே யனைய மாதர் துயர்படச் சுடுவெங் கானிற்
போகையே பொருளென் றெண்ணிப் பொருள்வயிற் போந்த நெஞ்சே
பாகையேர் சொல்லி பங்கன் பாதிரிப் புலியூர் பாடாச்
சேகையேர் மனத்தர் போல மீளவுஞ் சிந்திப் பாயே.

64. பானலம் பொருந்துங் கண்ணூர் பயிலினந் துறந்து விட்டுப்
பூநலங் கமழுங் கானற் பாதிரிப் புலியூர் வாழும்

---

62. பொருள் முற்றி மீளும் தலைமகன் மேகத்தை நோக்கிக் கூறுதல்.

புன்னை : "புன்னை நின்று கமழ் பாதிரிப்புலி யூருளான்" (தே.) புலவு - புலால் நாற்றத்தை. ஆழிச்சுழி - கூடற்சுழி; ஆழி-வட்டம். தலைவரைப் பிரிந்த மகளிர் அவர் வரவை எதிர்நோக்கிப் பார்க்கும் நிமித்தங்களுள் கூடற் சுழி ஒன்று. மணலிற் சுழியைச் சுழித்துப் பார்க்கையில் அது முதலும் கடையும் கூடுமாயின் வருவரென்றும், கூடாதாயின் வாராரென்றும் கொள்ளுதல் மரபு; "மரு கற்பெரு மான்வரிற், கூடு நீயென்று கூட விழைக்குமே" (தே.)

தோகையாட்கு என் வரவை உரைமின்.

63. மாதர் - தலைவி. கானில் - பாலைநிலத்தில். போகையே - செல்லுதலையே. பாகை ஏர் சொல்லி - வெல்லப்பாகை யொத்த சொல்லையுடைய உமாதேவியார். சேகு - வைரம்.

64. பானல் அம் பொருந்தும் - கருங்குவளைமலரினது அழகு பொருந்தும். கானல் - கடற்கரைச்சோலை. ஏன வெண்மருப்பு - பன்றியின்

ஏனவெண் மருப்ப ணிந்த வெம்மானை யிறைஞ்சு வார்மே
லானவர் பவக்க டற்ருழ் சுழியினி லழுந்தார் மன்னே.

(கலிவிருத்தம்)

65. மன்ற மேயிட மாநட மாடிய
குன்ற மேகடை ஞாழலெங் கொற்றவா
சென்ற மேவல ரூர்நகைத் தீச்சுட
நின்ற மேருவின் கோடு நிமிர்ந்ததே.

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

66. கோடெ லாமறு கான்மு ரன்றெழு கொய்ம்ம லர்க்குளிர் சோலையின்
பாடெ லாமணி வாவி போதணி பாதி ரிப்புலி யூருளார்
நாடெ லாமடி யோது வார்பெற நல்கி யாதுகொ ணரிமார்
வீடெ லாமுறை யேநு ழைந்தொரு வெண்ட லைப்பலி கொண்டதே.

பாங்கி புலம்பல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

67. கொண்ட லடிப்ப வுடைந்த கடற்றிரை கோது மணற்கரையிற்
கண்ட லடிப்பல சங்கின மொய்த்தெழு கன்னி வனப்பெருமாள்
அண்டர் துதித்தெழ நஞ்சு களத்திடை யன்று தரித்தவரித்
தண்டர ளத்தொளி வென்ற நகைக்குயில் சங்கை தவிர்த்திலரே.

---

வெண்மையான கொம்பு. இறைஞ்சுவார் மேலானவர்; அவர் பவக் கடற் சுழியினில் அழுந்தார்; பவம் - பிறப்பு.

65. குன்றமே: விளி. மேவலர் - பகைவர். கோடு - வளைவு, சிகரம். தேவரீரது நகை திரிபுரத்தை எரித்த அளவில், மேருமலையாகிய வில் பயன் படாமையின் நிமிர்ந்ததென்பது கருத்து.

66. கோடு - மரக்கொம்பு. அறுகால் - வண்டு. பாடு - பக்கம். நாடு எலாம் - நாடுகளை யெல்லாம். அடி ஓதுவார் - திருவடிகளின் புகழைக் கூறுவார். ஓதுவார் நாடெலாம் பெற நல்கி; நல்கி - வழங்கி. யாதுகொல் - என்ன வியப்பு. நாரிமார் - தாருகாவனத்து முனிவருடைய பத்தினிகள். வெண்டலை - கபாலத்தில்.

தம் திருவடிகளைப் புகழ்வார் நாடெலாம் பெறக் கொடுத்துத் தாம் மகளிர்பாற் சென்று இரத்தல் என்ன வியப்பென்றபடி.

67. கொண்டல் - கீழ்காற்று. கண்டல் அடி - தாழையின் அடியில். சங்கை - ஐயம்.

### பாங்கி தலைவன் எண்ணம் தெளிதல்

(வேறு)

68. இல்லாத விடையுடைய விணைக்கொம்பை யணைப்பான்போ
லிருங்கூற் றன்ன
பொல்லாத விழிக்கொம்பைப் புயத்தணைக்கப் புரிகின்றான்
பொருவிற் காளை
கல்லாதார் மனத்தணுகாக் கடைஞாழற் சிவக்கொழுந்தைக்
கருத்துள் வைத்துச்
செல்லார்போற் பழிபெறுமோ சேர்வார்போற் புகழ்பெறுமோ
தெரிகிலோமே.

### பாங்கி கூற்று

(வேறு)

69. தெருவிற் பெருமா விழவோவாத் திருவார் தருபா திரிப்புலியூர்
உருவிற் றிகழு முமைபாக ரொருவர் திருமா மலைச்சாரற்
கருவிற் குறவர் குலக்கொடியே காத லவர்தேர் வரக்காணேம்
திருவிற் புனந்தாங் கண்டுநிற்பார் செய்வ தியாதென் றறியேனே.

### நாரைவிடுதூது

(கலிநிலைத்துறை)

70. ஏன மருப்பு மாமையு மார்பத் திசைவித்துக்
கான வெருக்கின் கண்ணி முடித்தார் கடைஞாழல்
நான மணக்குந் தண்டுறை வாயென் னலனுண்டு
போன வரைக்கொண் டிவ்வழி வாராய் போதாவே.

---

68. இணைக்கொம்பை - இரண்டு நகில்களை. விழிக்கொம்பை - தலைவியை. புரிகின்றான் - விரும்புகின்றான். பழிபெறுமோ - பழியைப் பெறுவானோ. சிவக்கொழுந்தைச் சேர்வார்போற் புகழ்பெறுமோ.

69. விழவு ஓவா - திருவிழா நீங்காத. கருவில் - கொடிய வில்லையுடைய (பெரும்பாண். 74, ந.) தலைவர் புனத்தைக்கண்டு நிற்பார் போலுமென்று தோழி கருதினாள். இற்செறிக்கப்பட்டபின் தலைவன் வரவு காணாத தோழி கூறியது இது. 'அவர் வந்திலர். நாம் இற்செறிக்கப்பட்டதை உணராமல் வறிதே தினைப்புனம் நோக்கி வருந்துவர் போலும். இனி என் செய்வது !' என்று தோழி வருந்தினாள்.

70. நானம் - கஸ்தூரி. போதா - நாரை.

(வஞ்சிவிருத்தம்)

71. போத கத்துரி போர்வையார்
மீத கத்திகழ் மேனியார்
பாதி ரிப்புலி யூரையே
ஓதி நிற்பது ஞாலமே.

தலைவன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

72. ஞால மனைத்து முகத்து நயன மெனப்பெயர் பெற்ற
ஆலம் விழித்திடு மென்றே யமரரு முய்ந்திட லாகார்
காலன் விழப்பதம் வைத்த கண்ணுதல் கன்னிவ னத்துக்
கோல மலர்க்கொடி மார்பிற் கொங்கை முகிழ்த்திட வந்தே.

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

73. வந்தியே னின்பதமென் சிரத்தால் வாக்கால்
வழுத்திலே னின்புகழ்தான் வரம்பு கோலிச்
சிந்தியே னென்மனத்தா லென்று னுன்றன்
திருவருளுக் கடியேனிற் சிறந்தா ருண்டோ
நந்தியே முதலாய தேவர்க் கெல்லாம்
நாயகனே கடைஞாழ னம்பா நின்பால்
முந்தியே துயர்கெடுக்க வெண்ணும் பேரில்
முதலடுக்கில் யானன்றோ முன்னிற் பேனே.

---

71. போதகத்து உரி - யானைத்தோல். மீதக - மேன்மை பொருந்தும்படி. நிற்பது: நிற்கவேண்டுமென்னும் வியங்கோட் பொருளில் வந்தது; "மறப்ப தறிவிலென் கூற்றுக்களே" (சிற். 87) என்பதுபோல.

72. நயனமெனப் பெயர்பெற்ற ஆலம்: "அண்ட ராவி தரும்படி வந்தெழு மால கால மடங்கலும் வந்திரு, கெண்டை யாயொரு போதிற் கிடந்தது" (சிலாசாஸனப்பாடல்.) முகிழ்த்திட - தோன்ற. கொங்கை வந்து முகிழ்த்திட ஞால மனைத்தும், ஆலம் விழித்திடுமென்று அமரரும் உய்யாரென்க. ஞாலமும் அமரரும் உய்ந்திடலாகாரென்றது திணைவிரவி உயர்திணை முடிபேற்றது; "திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன்" (நாலடி. 151) என்புழிப்போல. அமரர் முன்னொருகால் ஆலத்தால் நைந்தவராதலால் கண்ணை நோக்கி அஞ்சினர்.

73. சிறந்தார்: குறிப்பு மொழி. முதலடுக்கு - முதல் வரிசை. யான்

## குறம்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

74. முன்னிய தொன்றுள தென்று மூதறி பெண்டிர் தொகுப்பத்
துன்னிய நெல்லை வகுத்துத் தும்பை கமழ்ந்துள தென்னே
சென்னியில் வைத்தன ளெங்கை திருந்திழை மையன் மருந்து
கன்னி வனத்துள தென்றாள் கட்டுவி கட்ட தெடுத்தே.

(வேறு)

75. எடுத்ததா ளண்ட கூட மிடித்ததிங் கிட்ட பொற்றாள்
தடுத்ததா ரணியைக் கொண்டு தாழ்த்தது சூழ்த்த திக்குப்
படுத்ததோ ளெட்டும் வீசிப் பாதிரிப் புலியூர் நாதர்
அடுத்ததாண் டவக்கூத் தாடக் காளிகூத் தடங்கி னாளே.

(நிலைமண்டில ஆசிரியப்பா)

76. *நான்மறை விளங்கின வானினம் வளர்ந்தன
வேந்த னோங்கினன் வான்புயல் பொழிந்தன
மறக்களை மாண்டன வறப்பயிர் விளைந்தன
கடவுள் பாதிரிப் புலியூர்ச் சுனைதொறும்
மடலவிழ் தாமரை மலர்தலிற் சிறந்தே.

---

நின்பதத்தை வணங்கல் முதலியன செய்யாமற் பின்நின்றேனெனினும் துயரத்தை நீக்கிக்கொள்ள முன் நிற்பேனென்றார்.

74. முன்னியது ஒன்று - கருதியதொருபொருள். தும்பை மலரின் மணம் இந்நெல்லிற் கமழ்ந்தது என்ன வியப்பு! திருந்திழை - தலைவி. கட்டுவி - கட்டுப் பார்த்துக் குறிகூறுபவள். கட்டது எடுத்து - கட்டுப் பார்த்தலை மேற்கொண்டு. சிறுமுறத்திற் பரப்பிய நெல்லில் ஒரு பிடி எடுத்து ஒற்றையா இரட்டையா என்று எண்ணிப் பார்த்துக் குறி கூறுதலைக் கட்டுப் பார்த்தலென்பர். கட்டுப் பார்த்தலைப் பற்றிய செய்திகளைக் குறுந்தொகை 23-ஆம் பாடலாலும் அதன் உரை முதலியவற்றாலும் அறியலாகும். தும்பை கமழ்ந்தது கொண்டு தலைவியின் மயலுக்குக் காரணம் அதனை அணிந்த சிவபிரானென்பதை அறிந்த குறத்தி அதனைக் குறிப்பாகக் கூறினாள்.

இச்செய்யுள் குறத்தி குறிபார்ப்பதைக் கண்டோர் கூறியது.

75. ஊர்த்துவதாண்டவச் சிறப்பை இச்செய்யுள் கூறும்.

எடுத்த தாள் - மேலே தூக்கிய திருவடி. இட்ட - ஊன்றிய. தாழ்த்தது - அழுத்தித் தாழச் செய்தது. திக்குப்படுத்த - திசையை அடக்கிய. அடுத்த தாண்டவக்கூத்து - தமக்கே பொருந்தியதாகிய ஊர்த்துவதாண்டவமாகிய நடனத்தை.

76. மறக்களை - பாவமாகிய களை. சுனை - இங்கே, குளம்.

### கவினழிபுரைத்தல்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

77. சிறந்த வன்றிலுஞ் சேவுடை மணியுந்
தென்ற லுந்திகழ் மன்றலம் பொதியிற்
பிறந்த சாந்தமு மாயர்தம் வேயும்
பிறையும் வந்தன கறையுண்டக் கண்டர்
இறந்த வானவ ரென்பிணை யணியு
மேக நாயக ரெழிற்கடை ஞாழற்
புறந்த ழைந்திடு புரிகுழன் மடந்தை
பொங்கு வெம்முலை பொதிந்தன பொன்னே.

### விருந்து விலக்கல்

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

78. பொன்னலம் பெருகிடும் பரிபுரக் கழலுெழார்
போகுவெங் கானில் வந்தீர்
இன்னலம் பெருகவின் றிரவுநீ ரிவளுட
னெம்மனைத் தங்கி நாளைக்
கன்னலுங் கதலியுங் கமுகமும் பலவுமார்
காவுசூழ் வாவி யூடே
செந்நெலுங் கமலமுந் திகழ்திருப் பாதிரிப்
புலிசையிற் செல்ல லாமே.

### வண்டுவிடுதூது

(கட்டளைக்கலித்துறை)

79. செல்லவற் றேதிருப் பாதிரிக் கீழ்ச்சென்று சேரநின்று
சொல்லவற் றேயென் றுயரா வதுதனைத் தொங்கற்கொன்றை

---

77. சிறந்த - பிறர்திறத்துச் சிறப்புள்ள. சே - எருது. வேய் - வேய்ங்குழல். பொன் - பசலை. அன்றிலோசை முதலியவற்றால் பிரிவுத்துன்பத்தைப் பெற்ற இத்தலைவியின் அழகழியப் பசலை நிறமுண்டாயிற்று.

78. பரிபுரத்தையுடைய திருவடி; பரிபுரம் - சிலம்பு. கழலென்றது பாடலேசர் திருவடிகளை. கன்னல் - கரும்பு. செந்நெலென்றது குளநெல்லை (பி - ம்.) 'செங்நலங் கமலமுங்.'

79. மெல்ல அன்றே அவற்கு என் குறை சொல்லி விரித்த வண்டு (இன்று மீண்டும்) செல்லும் வன்மையுடையதா? அன்றென்பது வலித்து நின்றது. வற்றே - வன்மையுடையதா. அருள்பூண்டுகொண்டு புல்லவற்றே.

புல்லவற் றேபுர மூன்றெரித் தாரருள் பூண்டுகொண்டு
மெல்லவற் றேயவற் கென்குறை சொல்லி விரித்தவண்டே.

ஊர்

(அறுசீர்ச் சந்தவிருத்தம்)

80. விரித்தார் மறைப்பொருள் விளைத்தார் திருக்கழன்
மிகைத்தார் புரத்தினைநகைத்
தெரித்தார் மடக்கொடி யிடத்தார் மழுப்படை
வலத்தா ரரக்கனைவிழ
நெரித்தார் திருப்பொது வினிற்பா ரிணைப்பத
நினைப்பார் கடைப்பிறவிபைத்
திரிப்பார் சிரப்பரி கலத்தா ரிருப்பது
திருப்பா திரிப்புலிசையே.

(கட்டளைக் கலித்துறை)

81. புலிக்கான் முனிமைந்தன் பாற்கடல் பெற்றனன் பொய்த்துவரு
கலிக்கால் புகாத கடற்கடை ஞாழலெங் கண்ணுதலே
எலிக்கா வுலகங்கள் யாவையு மீந்தனை யின்றுநன்று
பலிக்கா நடத்தியென் றேதுயர் கூருமிப் பாரிடமே.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

82. பாதியோர் பெண்ண தாகும் பாதிரிப் புலியூ ரையர்
பூதியு மென்புந் தோலும் புயங்களில் வயங்கச் சாத்தி
ஆதிநீ ளரியின் பாற்றோன் றையமேற் றருளி யாளக்
காதிய வுதிர மேற்குங் கபாலமுங் கைய தாமே.

---

80. மறைப்பொருளை விரித்தார். திருக்கு அழல் விளைத்தார் - நெற்றிக்கண்ணில் அக்கினியை உண்டாக்கினர். திருப்பொதுவில் - சிற்சபையில். நினைப்பார்கடை - நினைப்பாரிடத்து. திரிப்பார் - மாற்றுவார்; ஒழிப்பாரென்றபடி. சிரப் பரிகலத்தார் - பிரமகபாலமாகிய பிக்ஷாபாத்திரத்தை உடையவர்.

81. புலிக்கால்முனி மைந்தன் - உபமன்னியு முனிவர். கலியினது கால்புகாத: கலிப்பீடை இன்றென்றவாறு. எலிக்கா - எலியாக இருந்த மகாபலிச் சக்கரவர்த்திக்கு. "எண்ணெ யுண்ண வெண்ணுபு வந்து, நந்தா விளக்கை நுந்துபு பெயர்த்த, தாவுபுல் லெலிக்கு மூவுல காள, நொய்தினி லளித்த கைவளம் போற்றி" (கோயினுன்மணி மாலை, 40 : 31 - 4.)

82. தம் திருமேனியிற்பாதி ஒரு பெண்ணுடையதாக அமைந்த. பூதி - திருநீறு. வயங்க - விளங்க. காதிய - மோதிய.

### தலைவன் கூற்று

(வேறு)

83. கைத்த கடுக்களம் வைத்தெரி கைத்தலம்
வைத்தரை யிற்கனலும்
பைத்த படத்தை யுடுத்து நடித்தவர்
பாதிரி நீழலின்வாய்
மொய்த்த குழற்கொரு கொத்தலர் வைத்திட
வண்டுகண் மொய்த்திடினும்
பொய்த்த விடைக்கொரு பற்றிலை நெற்றியொர்
பொட்டினை யிட்டிடலே.

### சித்து

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

84. *இட்டமேதனக்கினியெழுந்துவாவிர்தத்திலே
யிரதமிட்டிருப்புநாகமிந்த்ரசாலமிட்டபின்
பிட்டநாபிசூதகத்தில்வேதகத்திலெம்முடைப்
பிரமயோகியாயிருந்தபிஞ்ஞகன்கடைக்குணஞ்
சிட்டவர்க்கமுற்பவித்திடப்பெருந்தவங்களைச்
செய்துகன்னிகாவனத்திருந்தசித்தர்நாளுமே
புட்டமிப்பொரிக்கறிக்குவித்துமெத்துபோசனம்
புத்திபண்ணிவைக்கினுமுமுத்திதந்துபோதுமே.

---

83. கடுவைக் களத்தில் வைத்து; கடு - விடம்; களம் - கழுத்து அரையில் படத்தை உடுத்து. பைத்த - விரித்த தலையையுடைய. மொய்த்திடின் நும். பற்று - பற்றுக்கோடு. இட்டிடல் - இடுதலையொழிக. "பொட்டணி யானுதல் போயிறும் பொய்போ லிடையெனப்பூண், இட்டணி யான்றவி சின்மல ரன்றி மிதிப்பக்கொடான், மட்டணி வார்குழல் வையான் மலர்வண் டுறுதலஞ்சிக், கட்டணி வார்சடை யோன்றில்லை போலிதன் காதலனே" (சிற். 303), "நாமே யிடையுள்ள வாறறி வாமினி நாங்கள்சொல்லலாமே மருதன் மருத வனத்தன்ன மன்னவரைப், பூமே லணிந்து பிழைக்கச்செய் தாரொரு பொட்டு மிட்டார், தாமே தளர்பவ ரைப்பார மேற்றுதறக்கதன்றே" (திருவிடைமும். 15) என்பவற்றை இச்செய்யுள் நினைப்பிக்கின்றது.

84. இச்செய்யுளின் பொருள் தெளிவாக விளங்கவில்லை.

### இவ்விடத்து இவ்வியற்றேன்றல்

(கலிவிருத்தம்)

85. தவளப்பொடி யணிமேனியர் தருணக்கொடி வெருவக்
கவளக்கரி யுரிசெய்தவர் கடைஞாழன் மருங்கே
குவளைக்கவள் விழியொப்பன கொங்கைக்கிடை யிடையும்
துவளப்படு மதரத்தொடு மொப்பாவன துப்பே.

### தலைவி பாலனை நோக்கிக் கூறல்

(கட்டளைக்கலித்துறை)

86. துப்பார் சடையர் திருக்கடை ஞாழலிற் சூளையர்வாய்த்
தப்பாத வெச்சிலைத் தாராது மைந்த சடைக்கங்கையாம்
அப்பாற் றழுவி யறுவையி னுற்றுடைத் தாழமுங்கி
இப்பான் முலையருந் தித்தரு வாய்நின் னெழின்முத்தமே.

### பாங்கி கூற்று

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

87. மேலைமுப் புரமும் வெந்தழல் கொளுந்த
மேருவில் வாங்கிய வீரா
ஆலையப் பழனப் பாதிரிப் புலியூ
ரம்பிகை பரவுமா ரமுதே

---

85. தவளப்பொடி - திருநீறு. தருணக்கொடி - இளைய கொடிபோல் வாராகிய உமாதேவியார். உமை அஞ்ச யானையுரித்தது: "மலையினி லரிவையை வெருவ வன்றேல், அலைவரு மதகரி யுரித்தவனே" (தே. திருஞா.) குவளைக்கு அவள் விழிகள் ஒப்பாவன. இடை இடையும் - இடை மெலியும். துவளப்படும் - துவளும். துப்பு - பவளம்.

86. பரத்தையர்மனையிலிருந்து மீண்டு வந்த தலைவன் புதல்வனை யெடுத்து அணைத்துத் தம்பலமிட்டு முத்தங்கொடுத்து அவன் வாயிலாகப் புகப் பாலனை நோக்கித் தலைவி கூறியது இது.

துப்பார் சடையர் - பவளத்தைப்போன்ற சடையை யுடையவர். சூளையர் - பரத்தையர். தாராது - எனக்குத் தாராமல். அப்பால் - தீர்த்தத் தினல். அறுவை - ஆடை. முங்கி - முழுகி. இப்பால் - பின்பு.

முதலில் முத்தந்தந்தால் பரத்தையர் வாயெச்சில் தன்மீது படுமென் றெண்ணினுள்; "தில்லை நல்லார், பொதுத்தம் பலங்கொணர்ந் தோபுதல் வாவெம்மைப் பூசிப்பதே" (சிற். 396) என்பதன் கருத்தை ஒருவாறு தழுவி வந்தது இது.

87. மேலை - முன்காலத்தில். ஆலை அ பழனம் - கரும்பாலைகளை யுடைய அழகிய வயல்களையுடைய; அ - அழகு. சாடி - மோதி. சூதம் -

சோலையிற் கமழுஞ் சண்பகஞ் சாடிச்
சூதமென் போதினை மோதி
மாலையிற் கழுநீர் மல்லிகை யளைந்து
வந்தது மந்தமா ருதமே.

## பாங்கி புலம்பல்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

88. மாதளை வீழ்கனிமேன் மல்லிகை முகையவிழா
மாதவி நிழலிடையே வண்டள வங்குடையாச்
சீதள மளவுமிளந் தென்ற லளைந்தபொழிற்
றிங்க டவழ்ந்ததிருப் பாதிரி நீழலுளாய்
சூதள வெனுமுலையாள் கைவளை யோடரையிற்
றூசு நெகிழ்ந்துவிழத் தூமணி யேய்மடவாள்
காதள வோடுநெடுங் கண்க டதும்பியநீர்
கடைபடு மிவளுயிரைக் காவல்செய் தருள்வாயே.

## இரவுவரல் விலக்கல்

(கட்டளைக்கலித்துறை)

89. அறுகா னிறையும் பொழில்சூழ் திருப்பா திரிப்புலியூர்
அறுகா னிறையு முடியா ரடிவணங் கார்களென்ன
அறுகா லலைப்புண்ணு நாகத் தடவி வருதலஞ்சி
அறுகால் வணங்குவ னின்னடிப் போதினி லாண்டகையே.

---

மாமரம். மந்தமாருதம் - தென்றற்காற்று. மாலையும் தென்றலும் வந்தன வாதலின் தலைவி ஆற்றுளாவளென்று பாங்கி வருந்தினள்.

88. வீழ்கனி - விரும்பப்படும் பழம். அவிழா - அவிழ்த்து. மாதவி - குருக்கத்தி. தளவம் - செம்முல்லை. குடையா - குடைந்து. (பி - ம்.) ‘குவியாச்.’ சூது - சூதிலாடுங்காய்கள். அரை - இடை. தூசு - ஆடை. கண்கள் நீர் ததும்பின. கடை - முடிவு.

89. அறுகால் நிறையும் - வண்டுகள் நிறைந்த. அறுகால் நிறையும் முடியார் - அறுகம்புல்லினல் நிறைந்த திருமுடியை உடையவர். அறுகால் அலைப்புண்ணும் நாகத்து அடவி - சிங்கத்தால் துன்புறுத்தப்படுகின்ற யானைகளையுடைய காடு. அறுகால் வணங்குவன் - ஆறு முறை வணக்கம் செய்வேன்.

இது தோழி தலைவனுக்கு நெறியருமை கூறி விலக்குதல்.

(நேரிசைவெண்பா)

90. ஆண்டானை யன்றயன்மா றேட வளப்பரிதா
நீண்டானை நீல மிடற்றானை - மாண்டார்கள்
என்பணிய மேனி யிறையைக் கடைஞாழல்
முன்பணிய நெஞ்சே முயல்.

## தலைவன் உற்றதுரைத்தல்

(கலிவிருத்தம்)

91. முயலார் வருவார் துயர்மோ தியிடும்
செயலார் கடைஞா ழல்செறிந் திலர்போற்
புயலார் குழன்மீ தளிபொங் கரிவை
கயலார் விழிதந் ததுகா தரமே.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

92. காத ரங்கத்தர் கைவளை கழன்றிடக் கயல்விழி யிணைகூர
மாத ரங்கத்துக் கடுக்கையுஞ் சாந்தமு மத்தமு மிவைவைத்தார்
மீத ரங்கிடு முப்புரம் பொடிபட மேருவெஞ் சிலைவாங்கித்
தீத ரங்கிடத் திகழ்திருப் பாதிரிப் புலிசையிற் சேர்வாரே.

## செவ்வி செப்பல்

(நேரிசைவெண்பா)

93. சேதாம்பல் பூக்குந் திருப்பா திரிப்புலியூர்
வேதாந்த நாதர் வியன்கயிலை-மாதர்

---

90. அரிதா - அரியபொருளாக. நீண்டானை - உயர்ந்து வளர்ந்தவனை. என்பு அணிய மேனி - எலும்பாகிய ஆபரணங்களையுடைய திருமேனி; அணிய: குறிப்புப் பெயரெச்சம். முன்பணிய முயல் - முன்னே பணிவதற்கு முயல்வாயாக.

91. தலைவன் பாங்கனிடம் தான் தலைவியின்பால் மயல்கொண்டு துன்புற்றதைக் கூறியது.

முயலார் வருவார் - இங்கே வரவேண்டுமென்ற முயற்சியில்லாராகித் தற்செயலாய் வருவாரது. அரிவையினது கயல் போன்ற கண். காதரம் - அச்சத்தை.

92. காதர் அங்கத்தர் - காதலையுடைய நெஞ்சினராகிய மகளிர்; காதர் - காதல்; லகரத்திற்கு ரகரம் போலியாக வந்தது. கூர - நீரால் மிக. மா தரங்கத்து - பெரிய அலைகளையுடைய கங்கையின்மீது. கடுக்கையும் - கொன்றைமாலையையும். மத்தமும் - ஊமத்தமலரையும். மீ தரங்கிடும் - மேலே சுழலுகின்ற. வாங்கி - வளைத்து. தீது அரங்கிட - தீமை கெட.

மொழியா மமுத முகமா முளரி
விழியாங் கொலைபயிலும் வேல்.

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

94. வேதனைப் படுவீர் பாதிரிப் புலியூர்
வேதனை விமலனை விரும்பாப்
பாதகத் தேனுக் கருளுமா ரமுதைப்
பரமனைப் பிரமனைச் சிரங்கொள்
பூதனைப் பூதப் படையனை விடைமேற்
புனிதனைக் கனிதனைப் பொதுவில்
நாதனை நாதப் பறையனைப் பிறையார்
நம்பனைச் செம்பொனைத் தொழுமே.

(கட்டளைக்கலித்துறை)

95. தொழக்கற் றிலைதொல்லைப் பாதிரிக் கீழ்ச்சென்று சூழவந்து
விழக்கற் றிலைவிடை யோனென் கிலைமெய் யுருகியன்பால்
அழக்கற் றிலையடி யாரொடுஞ் சேர்ந்திலை யாசைபொங்கி
எழக்கற் றிலைநெஞ்ச மேகெடு வாய்புகல் யாருனக்கே.

தலைவன் தலைவியைப் புகழ்தல்

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

96. யாரே யினியிப் படியே ருடையார்
எழிலார் தருபா திரிநீ ழலின்வாய்த்
தாரேர் தருகொன் றையணிந் ததிருச்
சடையார் கடைஞா ழலினீ டளிசேர்

---

93. தலைவன் பாங்கனுக்கு இவ்விடத்து இவ்வியற்றென்றல். செவ்வி - இயல்பு.

சேதாம்பல் - செவ்வாம்பல். வேதாந்தம் - உபநிடதம். மாதர் - தலைவியினது. மொழி அமுதமாம், முகம் முளரியாம், விழி வேலாம்.

94. வேதனைப் படுவீர் - துன்பப்படுபவர்களே. வேதனை - வேதவடிவானவனை. பூதனை - பரிசுத்தமானவனை; பூதம் - பரிசுத்தம். கனிதனை - பழத்தைப் போன்றவனை; "புனிதன் பொற்கழ லீச னெனுங்கனி" (தே. திருநா.) பொது - சபை. நாதப்பறையன்: "நாதப் பறையின ரன்னே யென்னும்" (திருவா.)

95. சூழவந்து விழ - வலஞ்செய்து வணங்க. புகல் - புகலிடம்.

96. ஏர் - அழகு. ஏருடையார் யாரென்றது, இல்லையென்றபடி.

நீரேர் கமழுங் கழுநீ ருடனே
நிறைபன் மலர்வா விபும்விண் டலரும்
பாரே கமழும் பொழிலுந் தனிநீ
பங்கே ருகம்வாழ் தருபைந் தொடியே.

## இரங்கல்

(பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

97. பைந்துண ருங்கிள ருந்தளி ருஞ்சில கோதிய கோகிலமே
பண்புபடும்படி வந்தல வன்பெடை யோடுறை பூவணையே
சந்தன முன்றிகழ் சண்பக முந்திய மாதவி சூழ்பொழிலே
சங்குதி ரண்டு தருந்தர ளங்குவை நீவிய வார்மணலே
கந்தம ரும்பு சுரும்பு முரன்றெழு காதல்வி டாமடுவே
கண்ட ரிடம்பயின் மங்கை தவம்புரி கன்னி வளம்பதியே
அந்திப டும்பொழு தஞ்சிய மென்பெடை கூடிய நீள்குருகே
அன்பர் நடந்திடி னெங்கள் பெருந்துய ராயின கூறிடுமே.

(எழுசீர்ச்சந்தவிருத்தம்)

98. கூறு நான்மறையர் கோல மானிடவர்
கூரு நீண்மழுவர் வீரமால்
ஏறு சேர்கொடிய ரேக மாமொருவ
ரீறி லாதகடை ஞாழலார்
பாறு சேர்தலையர் பாணி சேரனலர்
பாதி சேர்பிறையர் மீதுசேர்
ஆறு சூழ்சடைய ரானை யீருரிய
ராக மேயணிவர் நாகமே.

---

தார் - மாலை. நீர் ஏர் - நீரில் தோன்றிய. பைந்தொடியே, வாவியும் பொழிலும் நீ. (பி - ம்.) 'பொழில்சந் தனநீ.'

97 தோழி ஆடிடம் விடுத்துக் கொண்டகறல்.

துணர் - பூங்கொத்து. கோகிலம் - குயில். அலவன் - இங்கே ஆண் நண்டு. குவை நீவிய - குவிதல் நீங்கிய; பரந்திருக்கின்ற. கந்தம் - நறுமணம். முரன்று - ஒலி செய்து. கண்டர் - சிவபெருமான்; கண்டத்தில் விசேட முடையவர். நடந்திடின் - இங்கே வந்தால்.

98. கோலமான் இடவர் - அழகிய மானை இடப்பக்கத்தில் உடையவர். கூரும் - கூர்மையாகிய. திருமாலாகிய ஏறு. பாறு - பருந்து. பாணி - கை. ஆகம் - மார்பில். நாகம் - பாம்பை.

## காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்

(பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியச்சந்தவிருத்தம்)

99. நாகம் வருக்கை விரைகமழ் நாறு கடுக்கை முகையவிழ்
ஞாலம் விதித்து வளர்கடை ஞாழ லிடத்து மதியொரு
பாக முடித்த சடையினர் பாதி யிடத்து மலைதரு
பாவை தவத்து முயல்வதோர் பாதி ரியொக்கு நிழலிடை
மேக நிரைத்த குழலினை வீயின் முடித்தும் விழியெனும்
வேலினைவிட்டு மிளைஞரை வீழ வருத்து முலையிடை
ஏக வடத்தி னிடையிடை யாரு மிளைப்ப மதனனை
ஏவி யுமொத்த ருலகினை யீடு படுத்த முயல்வரே.

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

100. முத்தினை முகந்துபவ ளக்கொடியை வாரி
மோதியிரு டண்டலை முறித்துமத குந்தித்
தத்திவரு சந்தன மெறிந்தகி லுருட்டித்
தாமரையு நீலமு மணிந்ததட மெல்லாம்
மெத்திவரு கின்றகெடி லத்துவட பாலே
மெல்லிய றவஞ்செய்கடை ஞாழலை விரும்பிப்
புத்தியுட னன்புசெய்து போதுசொரி வாரைப்
புணர்ந்துபிரி யாள்விரைசெய் போதிலுறை பூவே.

முற்றிற்று *

---

99. நாகம் - சுரபுன்னை. வருக்கை - பலா. விரை கமழ் கடைஞாழல், அவிழ் கடைஞாழலென்க. ஒரு பாகம் - ஒரு கலையை. மலைதருபாவை - உமாதேவியார். வீயின் முடித்தும் - பூக்களோடு முடித்தும். வீழ - விரும்ப. ஏகவடம் - ஏகாவலி யென்னும் ஆபரணம். ஒத்தர் : ஒருத்த ரென்பதன் மரூஉ; "ஏஎ யிஃதொத்தன்" (கலி. 62 : 1.) ஈடுபடுத்த - எளிவரவு படுத்த.

100. மெத்தி - நிரப்பி. மெல்லியல் - உமாதேவியார். போதிலுறை பூ - திருமகள்.

* இதன் பின், "மன்மதவூ ஆனிமீ கவ - இது, ஆனங்கூர்ப் பொய் கைப்பாக்கம் முத்தியவாத்தியார் குமாரன் முத்துக்குமாரஸாமி எழுதி நிறை வேறியது" என ஓர் ஏட்டுப்பிரதியின் இறுதியில் எழுதப்பெற்றிருந்தது.

# செய்யுள் முதற்குறிப்பகராதி


| செய்யுள் | | பக்கம் | செய்யுள் | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| அடல் விடை | .... | 7 | கைத்தகடுக் களம் | .... | 40 |
| அரியானு | .... | 30 | கைத்தாமரை | .... | 27 |
| அறுகானிறை | .... | 42 | கொண்டலடிப்ப | .... | 34 |
| அன்னை யருந்தவஞ் | .... | 2 | கோடெலாம்று | .... | 34 |
| ஆண்டானை | .... | 43 | சாதிபேத | .... | 22 |
| ஆமாகி | .... | 16 | சிறந்த வன்றிலுஞ் | .... | 38 |
| ஆனுடைய கொடி | .... | 15 | செய்ய கரிய | .... | 19 |
| இட்டமேதுனக் | .... | 40 | செல்லவற்றே | .... | 38 |
| இடிக்கு மெரு | .... | 24 | சென்று பூதலத் | .... | 6 |
| இரவலாளருக் | .... | 17 | சேதாம்பல் | .... | 43 |
| இரை தேர் | .... | 11 | சொல்லொன்று | .... | 24 |
| இல்லாத விடை | .... | 35 | ஞாலமனைத்து | .... | 36 |
| இலங்கை | .... | 14 | ஞாழலிற் | .... | 21 |
| இன்னதிது | .... | 8 | தக்கனென்று | .... | 22 |
| ஊசலாடு | .... | 15 | தலைவானவர் | .... | 26 |
| எடுத்ததாளண்ட | .... | 37 | தவளப் பொடி | .... | 41 |
| என்னையயர்த் | .... | 18 | தன்னையானினைப்பத் | .... | 19 |
| ஏகாயமென் | .... | 17 | தீராத விரு | .... | 10 |
| ஏன மருப்பு | .... | 35 | துப்பார் சடையர் | .... | 41 |
| ஒழியாத பழந் | .... | 31 | துள்ளித் துடித்து | .... | 13 |
| காதரங்க | .... | 43 | தெருவிற் பெரு | .... | 35 |
| காதலாரங் | .... | 12 | தேவாசுரர் | .... | 7 |
| கால்கொண்டு | .... | 5 | தேனுர் திருப்பா | .... | 1 |
| காலமுங் | .... | 13 | தொழக்கற்றிலே | .... | 44 |
| குறியா வின்ப | .... | 12 | தோகையே யனைய | .... | 33 |
| குறை விளம்ப | .... | 18 | நாகம் வருக்கை | .... | 46 |
| கூறு நான்மறை | .... | 45 | நான்மறை | .... | 37 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| நித்தில முறுவற் | .... | 22 |
| நிறைபல வளந் | .... | 28 |
| நின்றகுலக்கிரி | .... | 25 |
| நினைபவர் தீவினை | .... | 25 |
| படைவாண் | .... | 11 |
| பண்டரங்க | .... | 20 |
| பணைமதக்கதக் | .... | 18 |
| பாகவான்மதி | ... | 31 |
| பாடுவார் | .... | 11 |
| பாதியோர் பெண் | .... | 39 |
| பாய்ந்த நீர் | .... | 6 |
| பாலற் கீவரப் | .... | 21 |
| பாவலர் பரவுங் | .... | 28 |
| பானலம் பொருந் | .... | 33 |
| புயங்களி | .... | 9 |
| புலவர்க்கருளும் | .... | 20 |
| புலிக்கான் முனி | .... | 39 |
| பூமாலை | .... | 2 |
| பைந்துணருங் | .... | 45 |
| பொருள்புரி மறை | .... | 9 |
| பொன்னலம் | .... | 38 |
| பொன்னினான் | .... | 1 |
| போத கத்துரி | .... | 36 |
| போயின கைவளை | .... | 27 |
| போனகமேவிட | .... | 16 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| மன்றமேயிட | .... | 34 |
| மாதளை வீழ் | .... | 42 |
| மாற்றுவார் | .... | 31 |
| மார்றிலாமலைக் | .... | 16 |
| மானாள பேதை | .... | 8 |
| மீதுபடும்புர | .... | 13 |
| மீளிதிருந்தடி | .... | 32 |
| முடியுடை | .... | 7 |
| முத்தினை முகந்து | .... | 46 |
| முயலார் வரு | .... | 43 |
| முயலினாறுதுய | .... | 20 |
| முன்னியதொன் | .... | 37 |
| மேலைமுப்புர | .... | 41 |
| மையன் மடவீர் | .... | 10 |
| யாரே யினியிப் | .... | 44 |
| வந்தியே னின்பதம் | .... | 36 |
| வரிக்கறையா | .... | 23 |
| வருந்தாத வகை | .... | 26 |
| வழிப்பட்ட | .... | 35 |
| வாசக்குழ | ... | 15 |
| விரித்தார் மறைப் | .... | 39 |
| விழியினீளமொரு | .... | 19 |
| வேத மொழி | .... | 5 |
| வேதனைப்படு | .... | 44 |

பதிப்பாசிரியர் குறிப்புரை முதலியவற்றுடன் பதிப்பித்துள்ள

# வேறு பிரபந்தங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| தக்கயாகப்பரணி : பழைய உரை | 4 | 0 |
| பாசவதைப்பரணி | 0 | 12 |
| திருக்காளத்திநாதருலா | 0 | 5 |
| திருப்பூவணநாதருலா | 0 | 5 |
| தேவையுலா (இராமேசுவர உலா) | 0 | 4 |
| மதுரைச் சொக்கநாதருலா | 0 | 6 |
| கடம்பர்கோயிலுலா | 0 | 6 |
| சங்கரலிங்க உலா (சங்கரநயினர் கோயில் உலா) | 0 | 6 |
| திரு இலஞ்சி முருகனுலா | 0 | 5 |
| திருக்கழுக்குன்றத்துலா | 0 | 8 |
| திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா | 0 | 4 |
| மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது | 0 | 5 |
| கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது | 0 | 8 |
| பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது | 0 | 4 |
| மான் விடுதூது | 0 | 6 |
| அழகர் கிள்ளை விடுதூது | 0 | 8 |
| திருமயிலைத் திரிபந்தாதி | 0 | 5 |
| திருமயிலை யமகவந்தாதி | 0 | 6 |
| வலிவலமும்மணிக்கோவை | 0 | 5 |
| மதுரைச் சொக்கநாதர் மும்மணிக்கோவை | 0 | 5 |
| கலைசைக்கோவை | 0 | 12 |
| பழமலைக்கோவை | 0 | 10 |
| திருவாவடுதுறைக்கோவை | 0 | 10 |
| சிராமலைக்கோவை | 0 | 12 |
| திருவாரூர்க்கோவை | 1 | 4 |
| கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் | 2 | 8 |
| ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள் | 4 | 0 |
| ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு மூலம் | 5 | 10 |
| சிவசிவ வெண்பா | 0 | 8 |
| திருமலையாண்டவர் குறவஞ்சி | 0 | 6 |
| திருக்காளத்திநாதர் இட்டகாமியமாலை | 0 | 2 |
| மகர நெடுங்குழைக்காதர் பாமாலை | 0 | 4 |
| திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் (2-ம் பதிப்பு 1927) | 2 | 8 |
| மண்ணிப்படிக்கரைப் புராணம் | 0 | 8 |
| திருவாரூர்த்தியாகராசலீலை | 0 | 12 |
| ஆற்றூர்ப் புராணம் | 0 | 10 |
| விளத்தொட்டிப் புராணம் | 0 | 6 |
| தணிகாசல புராணம் | 0 | 10 |

கிடைக்குமிடம் :— **"தியாகராஜ விலாசம்"**

பிள்ளையார்கோயில் தெரு,

திருவேட்டீசுவரன்பேட்டை, சென்னை.